

Vol.29 | No. 7 | July 2025 The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்






New Priests’ Qurbana at Kattathurai




Chrtist Jubilee of Religious at Kalluvilai




Christ Jubilee of Missionaries at Madurai

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 29 No :7 JULY 2025



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| உயர் பேராயர் திருமுகம் | 09 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 13 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 14 |
| மிஷன்லீக் இயக்கம் | 16 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 17 |
| இல்வாழ்வு இயக்கம் | 22 |
| வின்சென்ட்-தே-பவுல் சபை | 24 |
| உறவிய மலர் | 25 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 27 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 32 |
| மறைமாவட்ட செய்திகள் | 33 |
| மறைவட்ட செய்திகள் | 34 |
| தென்காசி மறைத்தள செய்திகள் | 44 |
| MONTHLY AGENDA - JULY 2025 | 45 |
| BISHOP'S ENGAGEMENTS - JULY 2025 | 48 |

Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Thomas Kuzhikodil**

Associate Editors

**Fr. Thomas Sathianesan**

**Mr. S.M.Edwinson**

**Mr. Iyathurai**

Published by:

**Fr. Thomas Kuzhikodil**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**Mary Jency V.M**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/171/2025** **30 June 2025**

**Dear Readers,**

Greetings and prayerful wishes from Bishop's House, Thuckalay!

I write this circular to you today as a fellow priest and co-worker in the vineyard of the Lord, with a heart filled with hope and determination regarding a sacred mission that has been close to my heart since I was appointed the Bishop of our beloved Eparchy of Thuckalay in 2012.

**Our Historical Journey**

As you are well aware, the Eparchy of Thuckalay was canonically established on 11 November 1996 as a testament to the growing faith community of the Syro-Malabar Church in the Kanyakumari district of Tamil Nadu. For nearly three decades, we have flourished as an Eparchial family, witnessing countless baptisms, confirmations, ordinations, and marriages. Our parishes have grown, our faithful have multiplied, and our spiritual life has deepened.

Yet, in all these years of grace and growth, we have remained without the most visible symbol of our episcopal identity and unity—our cathedral church. A cathedral is not merely a building; it is the Ecclesia Mater (Mother Church) of our Eparchy, the seat of the Bishop, and the spiritual heart from which episcopal authority and pastoral care flow to all corners of our territory.

**The Sacred Significance of a Cathedral**

The word "cathedral" derives from the Latin cathedra, meaning the Bishop's chair or throne. It represents:

- **The Centre of Unity:** The cathedral serves as the focal point where all parishes and faithful find their common identity and

purpose under the Bishop's pastoral leadership.

• **The House of Prayer:** It stands as the principal place of worship for the entire Eparchy, where the most solemn liturgical celebrations take place, especially during the great feasts of our Syro-Malabar tradition.

• **The Symbol of Permanence:** A cathedral declares to the world the enduring presence of the Church in our region, serving future generations as a beacon of faith, hope, and charity.

• **The Centre of Episcopal Ministry:** From the cathedral, the Bishop exercises his threefold ministry of teaching, sanctifying, and governing, making it the nerve centre of diocesan administration and pastoral outreach.

**Our Present Need and Opportunity**

After careful prayer, consultation with our Presbyterium, and extensive dialogue with our core planning groups the time has come to transform our long-cherished dream into reality and these days the sub-committees are being formed. The construction of our cathedral church is not merely an architectural project—it is a spiritual pilgrimage that will unite our entire diocesan family in common purpose and sacrifice. and sub-committees

Our current circumstances present us with unprecedented opportunities:

• A mature and committed faithful community ready to accept and contribute

• Experienced priests and lay leaders are prepared to guide this mission

• Technical expertise available within our Eparchy

• A growing recognition of our need for a proper episcopal centre

**A Call to Unity and Action**

This sacred undertaking requires the wholehearted participation of every priest in our Eparchy. As we have already discussed this matter

in our Presbyterium and established our organisational structure through various specialised committees, each with distinct roles and responsibilities, I now call upon each of you to embrace this mission with renewed vigour and dedication.

- **Your Pastoral Leadership:** You are called to be the spiritual animators and primary advocates of this project in your parishes. Through your preaching, teaching, and personal witness, inspire the faithful to see this cathedral not as a burden, but as a privilege—an opportunity to participate in building God's house. Your enthusiasm and commitment will determine the success of this endeavour in your pastoral care.
- **Your Role in the Committees:** Many of you will serve as coordinators and key members in the various committees we have established. Whether in spiritual animation, parish coordination, or forane leadership, your priestly ministry is essential to ensuring that this project remains deeply rooted in prayer and pastoral care.
- **Your Unity with the Bishop:** This cathedral project is an expression of our priestly unity around the episcopal chair. As my co-workers in the apostolic ministry, your support and collaboration make this dream achievable. Together, we will demonstrate to our faithful the power of priestly brotherhood working toward a common sacred goal.

**The Path Forward**

Our comprehensive committee structure ensures that every aspect of this monumental undertaking will receive proper attention from spiritual animation to technical supervision, from fundraising to media communications, from donor relations to construction site support—every detail has been carefully planned to ensure transparency, efficiency, and spiritual authenticity in our approach.

We commit ourselves to regular updates, transparent financial reporting, and inclusive decision-making throughout this journey. This cathedral belongs to all of us, and we will all contribute to its completion.

**A Sacred Investment in Future Generations**

When we build our cathedral, we make not just for ourselves, but for our children and grandchildren. We create a spiritual heritage that will serve the Syro-Malabar faithful of Tamil Nadu for centuries to come. Every brick laid is a prayer for the future, every sacrifice made is an investment in the eternal.

Imagine the joy of celebrating our first Christmas midnight Mass in our own cathedral. Picture the solemnity of ordinations, the beauty of confirmations, and the grace of special liturgical celebrations in a space designed specifically for our ancient and beautiful Syro-Malabar liturgical traditions.

**Our Commitment and Invitation**

As your Bishop and fellow priest, I pledge my total commitment to this sacred mission. I will lead by example in personal sacrifice and dedication. But this cathedral must be built through our collective priestly witness and shared pastoral commitment. This is our pilgrimage as a presbyterium, our shared spiritual journey, our common witness to the faithful we serve.

I invite each of you to prayerfully consider how God is calling you to participate in this historic endeavour. Your leadership in your parishes, your participation in the committees, your personal prayers and sacrifices—every priestly contribution matters, every pastoral effort counts, every Mass offered for this intention is heard.

Let us begin this journey together with the same priestly zeal that inspired the great cathedral builders of our tradition. Let us work with the dedication of those who labour for the glory of God and the salvation of souls, knowing that our priestly ministry finds its fullest expression when centred around the Bishop's chair in our cathedral.

A prayer for our mission that we can pray every day in our churches. Almighty God, You who inspired King David to prepare for the building of Your temple and blessed King Solomon with wisdom to complete it, look with favour upon our desire to build a cathedral church for Your glory. Grant us the resources we need, the unity of

purpose we seek, and the perseverance to complete what we begin. Through the intercession of our Blessed Mother and Saint Thomas the Apostle, may this cathedral rise as a monument to Your love and a beacon of hope for all generations. Amen.

May God bless our endeavour, and may Our Blessed Mother and St Thomas, intercede for us in this sacred mission!

**CONCLUSION**

On 3 July, we celebrate Dukhrana, the feast of St Thomas. The doubt of St Thomas after the resurrection of Jesus became a moment of solid belief: "My Lord and my God!" (John 20:28). His encounter with Jesus teaches us how the right response to doubt, curiosity and searching can lead to deep belief. For us, Syro-Malabar Christians, Dukhrana represents not merely a liturgical celebration but a reaffirmation of our apostolic origins and unique identity within the global Christian community. The feast serves as a powerful reminder of our unbroken connection to the apostolic age, distinguishing us from later missionary activities and reinforcing our claim to an indigenous Christian tradition that predates European colonisation by over a millennium. The liturgies, processions, and cultural celebrations that we re-enact that day blend ancient Syriac traditions with local customs, creating a distinctive expression of faith that honours both our apostolic roots and our Indian cultural heritage. May we increase our faith in Jesus as we carry out the various ministries in which we are engaged. Let us lead our brothers and sisters entrusted to our care to have a deeper encounter with the Lord!

With my prayers and blessings,

Yours in Christ Jesus,

† George Rajendran SDB
Bishop of Thuckalay

**DIOCESE OF THUCKALAY**

MAR GEORGE RAJENDRAN SDB
Bishop of Thuckalay

BISHOP'S HOUSE
P. B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari - 629 175
Tamilnadu, India
bpgeorgerajendran@gmail.com


**Prot. No. 193/2025**

# DECREE

Rev. Fr. John (Jogesh) Polachirayil was ordained a priest for the Diocese of Buxar on 16 January 2014. On 28 October 2024 through a formal request, Fr. Jogesh expressed his desire to be incardinated in the Syro Malabar Catholic Eparchy of Thuckalay.

Since 05 July 2022, Fr. Jogesh has been rendering pastoral service in this Eparchy with the due permission of Most Rev. William D'Souza, SJ, the then Apostolic Administrator of Buxar. On 11 June 2025 Most Rev. James Shekhar, the Bishop of Buxar issued a Decree of No Objection for his ascription (Incardination) into the Eparchy of Thuckalay.

In accordance with can. 359, CCEO and in pursuance of the expressed desire of Fr. Jogesh for the ascription (incardination), having duly verified and examined all the concerned documents, I hereby incardinate Fr. John (Jogesh) Polachirayil perpetually and absolutely into the Eparchy of Thuckalay.

Given at the Eparchial Curia, Thuckalay on 03 July 2025, Feast of Dukhrana of St. Thomas Apostle.

† George Rajendran SDB
Bishop of Thuckalay

BISHOP GEORGE RAJENDRAN sdb * Diocese of Thuckalay *

Mar Raphael Thattil

Major Archbishop of the Syro-Malabar Church

Prot. No. 0482/2025

## திருமுகம்

## துக்ரானா திருவிழா-சபைநாள் 2025

சீரோ-மலபார் திருச்சபையின் உயர்பேராயர் மார் ராஃபேல் தட்டில், தனது உடன் பணியாளர்களான பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் அருட்பணியாளர்களுக்கும் துறவறத்தாருக்கும் தனது மேய்ப்புப் பணியின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள எல்லா இறைமக்களுக்கும் எழுதுவதாவது. ஆண்டவரின் அருள் உங்களோடு இருப்பதாக!

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய சகோதரர், சகோதரிகளே,

நமது நம்பிக்கையின் தந்தை, மறைசாட்சி திருத்தூதர் மார் தோமாவின் நினைவு தினத்தை துக்ரான என்னும் பெயரில் ஆண்டுதோறும் ஜூலை 3 ஆம் தேதி கொண்டாடி வருகிறோம். மார் தோமாவின் நற்செய்திப் பணி மற்றும் தீரமிகு இரத்தம் சிந்துதலால் நமது சபையானது உருவானது. ஆகையால், துக்ரான திருநாளை சபைநாளாக அனுசரிப்பது எல்லா வகையிலும் உகந்ததே. சீரோ-மலபார் கிறிஸ்தவர்களாகிய நம்மைப் பொறுத்தவரை; சபைநாள் நன்றி நவில்வதற்கான நாள், சுய ஆய்வுக்கான நாள், நமது திருத்தொண்டுப்பணிகளை புதுப்பிப்பதற்கான நாள்.

மார் தோமாவின் முன்மாதிரியை ஏற்று ஆண்டவருக்குச் சான்று பகரும் வகையில் கிறிஸ்தவ வாழ்வை மேற்கொள்வது, இன்றைய அவசியமாக இருக்கிறது. மேலோட்டமான வறட்டு அறிவுகளும், விதண்டா வாதங்களும் தலைதூக்கியுள்ள தற்காலத்தில், நாம் பகரும் நற்செய்தியானது இதயத்திலிருந்து எழும் அன்பின் வெளிப்பாடாக அமைந்தால் மட்டுமே அது பயன் தரும். “நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" என்னும் திருத்தூதர் தோமாவின் நம்பிக்கைப் பிரகடனம், ஈசோவிடம் அவர் கொண்டிருந்த தனிப்பட்ட அன்பின் வெளிப்பாடாக இருந்தது. சிக்கல்களும் உறுதியற்ற நிலையாமைகளும் தலைதூக்கியுள்ள இன்றைய உலகில், துக்ரானா கொண்டாட்டம் அர்த்தம் மிக்கதாய் மாற வேண்டுமென்றால், உயிர்த்தெழுந்த ஈசோவின் செய்தி

இதயம் நிறையும் அன்புடன் போதிக்கப்பட வேண்டும். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மாட்சியில் பங்கேற்க வேண்டுமென்றால், சிலுவை தரும் அவமானங்களையும் வலிகளையும் பொறுத்தாக வேண்டும். மார் தோமா ஆழமான நம்பிக்கையால் உந்தப்பட்டு, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மாட்சிமிக்க உடலில் கண்ட காயங்கள் நமக்கு சாட்சிய வாழ்வுக்கான ஆற்றலையும் ஊக்கத்தையும் தருவதாக!

ஜூலை 3ஆம் தேதியை சபைநாளாக, பல ஆண்டுகளாக நாம் அனுசரித்து வருகிறோம். ஆண்டவர் பொழிந்த அருளை எண்ணி நன்றி செலுத்துவதோடு, அவரது அருள் மேகத்துக்கு நிகராய் நம்மேல் நிழலாய் நின்று நமது செயல்பாடுகளை பாதுகாக்க வேண்டுதல் புரிவோமாக. தியாகமிக்க வரலாற்றுச் சுவடுகளை கடந்த பின்னர் தான்; சீரோ-மலபார் சபை உயர் பேராய சபையாக உயர்ந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். நமது மேய்ப்புப்பணி சார்ந்த பணிகள், கேரளாவிலிருந்து தொடங்கி, இந்தியா முழுவதிலும் உலகின் கடைகோடி வரைக்கும் எட்டியிருக்கிறது. சீரோ-மலபார் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர், தாய்த்திருச்சபையிலிருந்து பெற்ற நம்பிக்கையை உலகின் பல்வேறு பகுதிகளில் தங்களது சாட்சிய வாழ்வு வழியாக வாழ்ந்து காட்டுகிறார்கள் என்பது பேரானந்தத்தை நமக்குத் தருகிறது. நமக்கு முன்னால் மேய்ப்புப்பணி சார்ந்த கடமைகளும், திருத்தொண்டுப் பணிக்கான விசாலமான வெளிகளும் திறந்து கிடக்கின்றன என்பதை, இவ்விழா நினைவூட்டுகிறது. “நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு!" (1 கொரி 9, 16) என்னும் திருத்தூதர் பவுலின் வார்த்தைகள், சீரோ-மலபார் கிறிஸ்தவர்களாகிய நமக்கு மிகவே பொருந்தும். அருட்தந்தையர்களையும் அருட்சகோதரிகளையும் பொதுநிலையினர் திருத்தொண்டுப்பணியாளர்களையும் கடவுள் உளங்கனிந்து நமக்கு அளித்துள்ளார். அவர்கள், திருத்தொண்டு நிலையங்களுக்குச் செல்ல வேண்டும். வாய்ப்புகள் குறைவாக இருக்கலாம் இல்லையென்றால் பாதகமான சூழல்கள் நிலவலாம். ஆயினும், துணிவுடன் நற்செய்தியை பறைசாற்றவும் வேண்டும், அருளடையாளங்களை நிறைவேற்றவும் வேண்டும். மறைமாவட்டங்கள், துறவறச் சமூகங்கள், பொதுநிலையினர் அமைப்புகள் போன்றவை, திருத்தொண்டுப் பணிக்கென தங்கள் நிறுவனத்தை மறு அமைப்பாக்கம் செய்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாக இருக்கிறது.

2025, ஜனவரி மாதத்தில் நடந்த ஆயர் பேரவையின் போது, தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில், கடந்த ஆண்டு, மறைமாவட்டத்திற்கெனவும் துறவற சமூகங்களுக்கெனவும் மொத்தம் 283 குருமாணவர்கள் அருட்தந்தையர்களாக அருள்பொழிவு பெற்றுள்ளார்கள். மேலும், சீரோ-மலபார் சபைக்குட்பட்ட, ஆண் துறவற சமூகங்களுக்கென 132 நபர்கள் முதல் துறவற வாக்குறுதியையும், 145 பேர் நிரந்தர வாக்குறுதியையும் ஏற்றிருக்கிறார்கள். சீரோ-மலபார் சபைக்குட்பட்ட, பெண் துறவற சமூகங்களுக்கென 272 நவகன்னியர்கள் துறவற ஆடையை ஏற்று முதல் வாக்குறுதி நடத்தியிருக்கிறார்கள். அத்தோடு 338 பேர், நிரந்தர வாக்குறுதியும் அளித்திருக்கிறார்கள். அது மட்டுமின்றி, சீரோ-மலபார் சபையைச் சார்ந்தவர்கள், தன்னுரிமைப் பெற்ற பிற கத்தோலிக்கச் தனிச்சபைகளின் (sui juris) மறைமாவட்டங்களுக்கெனவும் துறவற சமூகங்களுக்கெனவும் தங்கள் வாழ்க்கையை அருட்பணியாளராகவோ துறவியாகவோ அர்ப்பணித்திருக்கிறார்கள். கடவுள் நம் சபை மீது தொடர்ந்து பொழிந்து வரும் ஆசிகளை நினைவுகூர்ந்து நன்றிநிறை மனதுடன் இத்தரவுகளை உங்களோடு பகிர்ந்து மகிழ்கிறேன். அத்தோடு, அவர்களுக்காக செபிப்பதற்கான அழைப்பாகவும் நான் இதை வைக்கிறேன். உயிருக்கு ஆபத்தான இடங்களில் பணி செய்வோர் உள்ளனர். இன்னல்களை எதிர்கொண்டு அருட்பணியாளர்களும், ஆண் மற்றும் பெண் துறவறத்தாரும் பணி செய்கிறார்கள் என்பதை நினைவில் வைத்து, நமது இறைவேண்டல்களில் அவர்களை மறவாது நினைப்போம். குருத்துவ மற்றும் துறவற வாழ்வுக்கான இறையழைத்தலை அடையாளம் கண்டு, ஊக்குதல் அளிக்க, சபை சமூகம் முழுவதும் ஒத்த மனதுடன் முயற்சிகளை மேற்கொண்டு, இறைப்பணிக்காக நம் பிள்ளைகளை அனுப்பிட முன்வர வேண்டும்.

ஏப்ரல் 21, 2025 அன்று மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை முன்னிட்டு, உலகளாவிய திருச்சபையும் பொதுச்சமூகமும் வருத்தம் அடைந்தது. ஏப்ரல் 26 அன்று நடந்த நல்லடக்கத் திருநிகழ்வில் பங்கேற்கும் பேறு எனக்குக் கிடைத்தது. அது ஆழமான ஆன்ம நிறைவின் நன்னாளாக அமைந்தது. மறைந்த திருத்தந்தையின் நினைவுத் திருப்பலியை, நான் இன்னும் சில ஆயர்களுடன் இணைந்து, திருத்தந்தையின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள மரியா பேராலயத்தில் ஒப்புக்கொடுத்தேன். மறைந்த திருத்தந்தை சீரோ-மலபார் சபையை அன்பு செய்தார். இந்தியா முழுவதும் திருத்தொண்டுப் பணிபுரிவதற்கான அனுமதியை திருத்தந்தை பிரான்சிஸ் அளித்தார் என்பதை நன்றியோடு

நினைவில் கொள்வோம். அது மட்டுமல்லாமல், வளைகுடா நாடுகளில், மேய்ப்புப்பணிக்கான அமைப்புகளை உருவாக்க அனுமதி அளித்ததோடு உரோமையில் வாழும், சீரோ-மலபார் சபை உறுப்பினர்களின் ஆன்ம தேவைகளை நிவர்த்திச் செய்வதற்காக, வழிபாட்டுக்கென, புனித அனஸ்தாசியா இளம் பேராலயத்தை (Minor Basilica) அனுமதி அளித்தார். நமது சபையின் ஒற்றுமையையும் சமூக உறவையும் மேம்படுத்தும் பொருட்டு அவர் நடத்திய அனைத்த முயற்சிகளும், அவர் நம் சபை மீது கொண்டிருந்த தந்தைக்குரிய பாசத்தை வெளிப்படுத்துகின்றன. இணைந்து பயணிக்கும் சபை உணர்வை நமக்குள் ஊட்டிய அவர், பிறர் கூறுவதற்கு செவிமடுத்து கரம்பிடித்து நடக்க வேண்டியதன் அவசியத்தைக் கற்றுத்தந்தார். இறை ஞானத்துடன் சபையை வழிநடத்திய திருத்தந்தை அவர்களுக்கு சீரோ-மலபார் சபை தனது நெஞ்சம் நிறைந்த அஞ்சலியை நன்றி ததம்பும் உளத்துடன் பாத காணிக்கையாக்குகிறது. திருத்தந்தை அவர்கள் நிலைபேரின்பம் துய்க்க தொடர்ந்து இறைவனை வேண்டுவோம். புதியத் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களை திருச்சபைக்காக கடவுள் கொடையாக அளித்திருக்கிறார். பல்வேறு சிக்கல்களை குறித்த தமது உறுதியான நிலைப்பாட்டின் மூலமாகவும், உரையாடல்களுக்கான அழைப்பு வாயிலாகவும், திருச்சபை மக்கள் மற்றும் பொது சமூகத்தின் கவனத்தை அவர் ஈர்த்திருக்கிறார். கீழைத்திருச்சபைகளைப் பொறுத்தவரைக்கும் மிக முக்கியமான ஒரு நிகழ்வானது மே 14, 2025 அன்று நடந்தது. கீழைத்திருச்சபைகளுக்கென ஒதுக்கப்பட்ட யூபிலி கொண்டாட்டத்தின் பகுதியாக, திருத்தந்தை அவர்கள், கீழைத் திருச்சபையின் தலைவர்களை சந்தித்த வேளையில், கீழைத்திருச்சபையைக் குறித்த தமது மேய்ப்புப்பணி பார்வையை முன்வைத்தார். கத்தோலிக்கத் திருச்சபையின் சமூக உறவின் இன்றியமையாத உறுப்பாக கீழைத்திருச்சபைத் திகழ்கிறது என்று அவர் கூறினார். அவற்றின் தனி அடையாளத்தை காத்தல், மரபுகளை பத்திரப்படுத்துதல், அவற்றில் காணப்படும் வழிபாடு மற்றும் சபைசார்ந்த வேற்றுமைகளை பாராட்டி மதித்தல் போன்றவற்றை குறித்து திருத்தந்தை பதினான்காம் லியோ கூறினார். அவரது உரை, அங்கீகாரமாகவும், அதே வேளையில் தன்னடையாளத்தை காப்பதற்கான ஊக்கவுரையாகவும் அமைந்தது எனலாம். கீழைத் திருச்சபையின் தலைவர்களை சந்திப்பதற்கென ஒதுக்கப்பட்டிருந்த அதே நாளில், நானும் திருத்தந்தையை சந்தித்து, சீரோ-மலபார் சபை சார்பில் வாழ்த்துகளை தெரிவித்தேன். கீழைத் திருச்சபையின் தன்னடையாளத்தை

தக்கவைத்தவாறு, உலகளாவிய சபையோடு சேர்ந்து பயணிப்பதற்கான அரிய வாய்ப்பானது, திருத்தூதர் தோமாவின் பிள்ளைகளான நமக்கு கைகூடியிருக்கிறது. திருத்தந்தை கூறியதைப் போன்று, நவீன உலகிற்கு வெளிச்சம் கொடுக்கும் தொன்மை வாய்ந்த நம்பிக்கையின் கிழக்கின் தீபமாக ஒளிர்ந்திட நம்மால் இயலும். பேதுருவின் வாரிசாக, கிறிஸ்துவின் பிரதிநிதியாக விளங்கும் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களுக்காக நாம் இறைவனிடம் வேண்டுவோம். அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் மேலானப் பணியை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆவியாரின் ஒளியும் ஆற்றலும் அவர் நிரம்பப்பெற வேண்டுவோம்.

நமது தந்தை மார் தோமாவின் நம்பிக்கை அறிக்கையானது, ஈசோவோடு அவர் கொண்டிருந்த ஆழமான இதய அன்பின் வெளிப்பாடாக இருந்தது என்பதை நான் தொடக்கத்திலேயே உங்களுக்குக் கூறினேன். நமது தனிப்பட்ட மற்றும் சபை வாழ்விற்கு இவ்விதயத் தொடர்பு முக்கியம் என்பதை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அக்டோபர் 24இல் வெளியிட்ட "அவர் நம்மேல் அன்புகூர்ந்தார்" (Dilexit Nos) என்னும் திருமடல் வழியாக அறிவுறுத்தினார். இம்மடல் வழியாக திருத்தந்தை அவர்கள் பின்வரும் செய்திகளை நமக்குத் தந்தார்: ஈசோவின் திருஇருதய அன்பு நிபந்தனைகள் அற்ற முழுமையான அன்பின் வெளிப்பாடாக இருக்கிறது. இவ்வன்பு, கடவுளோடும் சகோதரர் சகோதரிகளோடும் அன்புறவில் வாழ அழைக்கிறது. இதன் வழியாக நமது வாழ்வு நேர்மைமிக்கதாகவும் நிறைவுடையதாகவும் மாறும். மாற்றான் மனநிலை, பிறரை புறந்தள்ளும் எண்ணங்கள் மற்றும் மேலோட்டமான வாழ்வு ஆகியவை அனைத்தும், இதயத்தில் முளைவிட்டு வளர்ந்து வரும் வெறுமையின் புற அடையாளங்கள் என்பதை நினைவில் கொள்வோம். ஈசோவின் இதயத்தோடு நம் இதயத்தை இணைக்கும் போது, சமுதாயத்தில் காணப்படும் வேற்றுமைகளோடு ஒப்புரவாகி மனித இனத்தை புதுப்பிக்கும் ஆற்றல் கிடைக்கும். ஆகையால் சமூக மாற்றம் என்பது தனிமனிதரின் இதய புதுப்பித்தலிலிருந்துத் தொடங்குகிறது. இதயத்திலிருந்து தொடங்கினால் மட்டுமே, வேறுபட்ட மனம் மற்றும் விருப்புறுதிகளைக் கொண்ட மனிதர்களோடு ஒப்புரவாக இயலும். அதனூடாக தூய ஆவியார் நம்மை சகோதர ஒற்றுமையை நோக்கி வழிநடத்துவார் (எண். 28). நமது திறமைகள் மீது அதீத நம்பிக்கைக் கொள்ளாமல், ஈசோவின் இதயமே அடைக்கலம் எனக் கொண்டால் புதுமைகள் பிறக்கும். நம்மையே நாம் அறிந்து கொள்ள உதவுவதும், பிறரை அன்பு செய்ய தூண்டுவதும்

ஈசோவின் திருஇருதயம் ஒன்றே . ஆகையால் புதிப்பித்தல் ஆசிக்கிறோம் என்றால், நம் இதயத்தைப் புதுப்பிக்கத் துணிவோம். குடும்பத்தையும் சபை சமூகத்தையும் புதுப்பிக்க வேண்டுமென்றால், தனிப்பட்ட பிளவை உருவாக்கும் முற்சார்பு எண்ணங்களையும், பாரபட்ச உணர்வுகளையும் ஒதுக்கி வைத்து விட்டு,ஈசோவின் இதயத்தோடு உறவாட முனைவோம். அது தரும் ஆன்ம விழிப்பின் புத்துணர்வைப் பெற்றவர்களாய், தோழைமை உணர்வுடன் ஒற்றுமையை வளர்ப்போம்.

துக்ரான மற்றும் சபைநாளின் வாழ்த்துகளை அனைவருக்கும் ஒருமுறை கூட தெரிவித்துக் கொள்கிறேன். அன்னை மரியா, புனித யோசேப்பு, திருத்தூதர் புனித தோமா, மற்றும் புனிதர்களின் பரிந்துரைகள் நமக்குத் துணை நிற்பவனவாக.

காக்கனாடு செயின்ட் தோமஸ் மவுண்டில் அமைந்துள்ள உயர் பேராய ஆட்சி மையத்திலிருந்து, ஜூன் 20, 2025 அன்று வழங்கப்பட்டது.

மார் ராஃபேல் தட்டில்
சீரோ மலபார் சபையின் உயர்பேராயர்

## வரவிருக்கும் நிகழ்வுகள்

**ஜூலை 03 – துக்ரானா திருநாள்**

**ஜூலை 10 – இளங்குரு மடத்தில் கல்வி ஆண்டு தொடக்க விழா**

**ஜூலை 15–16 – இளம் அருட்தந்தையர்களுக்கான உருவாக்கப் பயிற்சி**

**ஜூலை 16 – சங்கமத்தில் அருட்தந்தையர்களின் கூட்டம்**

**ஜூலை 25 – அருட்தந்தையர் பேரவைக் கூட்டம்**

**ஜூலை 26 – புனித அல்போன்சா திருத்தல நடை பயணம்**

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

**“ஈசோ ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்"**

## பொறுப்பாளர்களின்கூடுகை

2025 ஜூன் 14 இரவு 8.00 மணிக்கு இணையதளம் வழியாக பொறுப்பாளர்கள் கூடுகை இயக்குநர் தலைமையில் நடைபெற்றது. அதில் ஆண்டுவிழா மற்றும் கிறிஸ்து ஜூபிலி எப்படி நடத்துவது என்பது பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. பின்னர் இறுதி ஆசீருடன் கூட்டம் நிறைவுற்றது.

## ஆண்டுவிழா

2025 ஜூன் 22, ஞாயிற்றுக்கிழமை மதியம் 2 மணிக்கு மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் கிறிஸ்து ஜூபிலி மற்றும் குழந்தை ஈசோ இயக்க ஆண்டுவிழா பொதுக் கூட்டம் ஆரம்பமானது. இயக்குநர் அருட்தந்தை டோஜி கொழுவக்கண்டத்தில் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். கன்னியாகுமரி சமூகசேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை ஆன்றணி மகேஷ், மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர்ராஜ், ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். ஒரு வருட கால நிகழ்வுகள் அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டது. அறிக்கை செயலர் அருட்சகோதரி பிளஸ்ஸி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. மாங்கரை புனித ஜேம்ஸ் ஆலயத்தின் குழந்தை ஈசோ இயக்கக் குழந்தைகள் இறைவார்த்தையை மனப்பாடமாக அரங்கத்தில் ஒப்புவித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேதகு ஆயர் அவர்களின் தலைமையுரையும், அருட்தந்தை மகேஷ் அவர்களின் சிறப்புரையும், ஆற்றினார்கள். இடையிடையே குழந்தைகளின் சிறப்பு கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. நிகழ்வுகள் அனைத்தையும் முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயக் குழந்தைகள் தொகுத்து வழங்கினர். கலைவிழா மற்றும் மாதச் செயல்பாடுகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது. இறுதியில் துணைச் செயலர் அவர்கள் நன்றிகூற ஆண்டுவிழா இனிதே நிறைவடைந்தது. இவ்விழாவில் அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள், பொறுப்பாளர்கள் மற்றும் ஏராளமான குழந்தைகள் பங்கெடுத்தனர்.

**இயக்குநர்,**
**அருட்தந்தை டோஜி கொழுவக்கண்டத்தில்**

சிறுமலர்
MISSION LEAGUE

# மிஷன் லீக் இயக்கம்

## பொறுப்பாளர்கள் கூட்டம்

இயக்கத்தின் பொறுப்பாளர்கள் கூட்டம் ஜூன் 21, காலை 10 மணி அளவில் பிலாங்காலை FCC அருட்சகோதரிகள் இல்ல வளாகத்தில் நடைபெற்றது. இயக்குனர் தந்தை பிரின்டோ குரியாஸ் அவர்கள் தலைமையில் இணை இயக்குநர் அருட்தந்தை ஷிஜோ, அருட்சகோதரி ஆன்கிரேஸ் முன்னிலையில் ஜெபத்துடன் கூட்டம் ஆரம்பமானது. எல்லா பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். ஒரு சில தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டது.

**100 மேனி** என்ற புத்தகம் மாணவர்கள் இறைவார்த்தை படிக்க வழிகாட்டும். அதை வாங்கி அனைவரும் பயனடையச் செய்யுங்கள். ஒரு பங்கு ஒரு திருத்தொண்டுத் தளத்திற்கு உதவி செய்ய வேண்டும். மறைவட்ட அளவில் இயக்கத்தை பார்வையிட்டு அதன் அறிக்கை தயாரித்து வழங்குதல். வருடாந்திர திட்டங்களில் புனிதரின் நூற்றாண்டு விழா முக்கிய இடம் பெறும். மகாஜூபிலி என்ற பெயரில் கொண்டாட்டங்கள் நடத்தி புனிதரின் பெயர் தாங்கிய ஆலயங்களுக்கு சென்று சந்தித்து ஜெபித்தல். தொடர்ந்து வினாடி -வினாப் போட்டிகள் நடத்துதல். ருத்தொண்டு தளங்கள் சந்திப்பு நடத்தி ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்துதல். போன்ற தீர்மானங்களுடன் கூட்டம் இனிது நிறைவு பெற்றது.

**இயக்குநர்,**

**அருட்தந்தை பிரிண்டோகுரியாஸ்**

சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

## நடுவண் செயற்குழு கூட்டம்

ஜூலை 01, மதியம் 2 மணி அளவில் நடுவண் செயற்குழு கூட்டம் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் வைத்து ஜெபமாலையுடன் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் புதிதாக SMYM ன் இயக்குநராக பதவியேற்ற அருட்தந்தை அனில் ராஜ் அவர்களுக்கு இயக்கத்தின் தலைவர் செல்வன் மனோஜ் பூங்கொத்து கொடுக்க ஆலோசகர் செல்வன் அஜித் அவர்கள் சால்வை அணிவித்து வரவேற்றனர். தொடர்ந்து ஜூன் மற்றும் ஜூலை மாதங்களுக்கான நிகழ்ச்சி நிரல் தயார் செய்யப்பட்டது. அடுத்தபடியாக ஜூலை மாதம் அல்போன்சா நடை பயணம் நடத்தப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது அதற்கு முன் தலைமைத்துவ பயிற்சி முகாம் நடத்த வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டு ஜூன் 27, 28 ,29 ஆகிய நாட்களில் நடத்த வேண்டும் எனவும் தீர்மானம் செய்யப்பட்டது. முகாமிற்காக இரண்டாவது தயாரிப்புக் கூட்டமானது, 10 ஆம் தேதி முன்சிறை புனித ஜார்ஜியார் திருத்தலத்தில் இரவு 8.00 மணியளவில் ஆரம்பமானது. முகாமானது சங்கமத்தில் வைத்து நடத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. முகாமிற்கான பயிற்சி வகுப்புகள் யார் முன்னின்று நடத்துவார் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

முகாமிற்காக மூன்றாவது தயாரிப்புக் கூட்டமாக, 15 ஆம் தேதி, மதியம் 2 மணி அளவில் நடுவண் செயற்குழு கூட்டம் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் மதியம் 2 மணியளவில் ஆரம்பமானது. இதில் தலைமைத்துவ பயிற்சிக்கான கால அட்டவணை இறுதி செய்யப்பட்டது. தலைமைத்துவ பயிற்சி முகாமை வழிநடத்தும் விதமாக பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். இறுதி ஆசீருடன் இக்கூட்டம் நிறைவடைந்தது.

## தலைமைத்துவ பயிற்சி முகாம்

தக்கலை மறைமாவட்டம் சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் 2025-ஆம் ஆண்டிற்கான தலைமைத்துவ பயிற்சி முகாம் 2025 ஜூன் 27,28,

29 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தினங்களில் தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. முதல் நாள் காலை 9:30 மணிக்கு பெயர் பதிவுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது சரியாக 10.00 மணிக்கு பிலாங்கரை இளையோர்களின் இறை வணக்கப் பாடலுடன் பயிற்சி ஆரம்பமானது. நடுவண் செயற்குழு தலைவர் செல்வன் மனோஜ் அவர்கள் வரவேற்புரை கூறினார். தொடர்ந்து மிஷன் அருட்தந்தை ஜார்ஜ் களங்கரா SDB அவர்கள் தொடக்க உரை ஆற்றினார். இவ்வுரையில் இளைஞர்கள் நுண்ணறிவு தொழில்நுட்பத்தை எவ்வாறு சமன் செய்வது மற்றும் எதிர்கால இளையோர்களை குறித்தும், பேசினார் . பின்னர் மறைமாவட்ட இளையோர் இயக்க இயக்குநர் தந்தை அவர்கள் தலைமைத்துவ பயிற்சி முகாமின் நோக்கம் மற்றும் பயன்பாடுகள் குறித்து கூறியதோடு தலைமைத்துவ பயிற்சி முகாம் வெற்றி பெற அனைத்து இளையோர்களையும் உற்சாகப்படுத்தினார்.

தலைமைத்துவ பயிற்சி முகாமில் முதல் அமர்வு அருட்தந்தை ஜஸ்டின் சுதீஷ் அவர்களால் நடத்தப்பட்டது. மன அழுத்தத்திலிருந்து விடுபட்டு வாழ்க்கையில் எவ்வாறு வெற்றி பெறுவது என்பது குறித்து சிறந்த முறையில் வகுப்பு நடத்தினார் மதியம் ஒரு மணி அளவில் மதிய உணவு வழங்கப்பட்டது. பின் மாலை 3 மணி அளவில் அருட்தந்தை ரோபின்ஸ்



குழிக்கோடில் அவர்களால் குறும்படம் திரையிடப்பட்டு ஊடகம் பற்றிய கருத்துரை வழங்கப்பட்டது. ஆறு முப்பது மணி அளவில் அருட்தந்தை சுபின் ஸ்கரியா அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து ஜெபமாலை மற்றும் நற்கருணை ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. இரவு உணவுக்கு பின் ஒவ்வொரு குழுவிற்கும் கொடுக்கப்பட்ட தலைப்புகளின்

கீழ் விவாதங்கள் அறிக்கையாக வழங்கப்பட்டது. தொடர்ந்து அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரிப் பேராசிரியர் திருமதி பபிஷா அவர்கள் இளையோர் இன்றைய காலத்தில் சமூக சிந்தனையோடு எவ்வாறு செயல்பட வேண்டும் என்று கருத்துக்களை வழங்கினார்.

இரண்டாம் நாளான ஜூன் 28 சனிக்கிழமை காலை 06.45 மணியளவில் இயக்குநர் தந்தை அனில் ராஜ் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. அன்றைய முதல் அமர்வானது பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் அவர்களால் இறைநம்பிக்கையில் எவ்வாறு வாழ்வது என்றும், கடவுளை மையமாக கொண்டு வாழ வேண்டும் என்றும் வகுப்புகள் நடத்தினார். மேலும், பேரருட்தந்தை அவர்கள் சிந்தனையை தூண்டும் விதமாக பல கேள்விகளை எழுப்பி இளையோர்களுடன் உரையாடினார். இரண்டாம் அமர்வானது 11.30 மணிக்கு ஆரம்பமானது பேரருட்தந்தை முனைவர் ஜோசப் சந்தோஷ் அவர்கள், இன்றைய காலத்தில் கத்தோலிக்க இளையோர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றியும், அவர்களது மன நிலையை குறித்தும் விவாதம் நிறைந்த கருத்தமர்வாக வழிநடத்தி சென்றார். மூன்றாவது அமர்வின் போது இளையோர்களின் சிந்தனையை வலுப்படுத்த TASK கொடுக்கப்பட்டது. TASK என்னவென்றால் திருச்சபையின் வளர்ச்சிக்கு ஊடகங்கள் எவ்வாறு உதவுகின்றன என்பதை குழுக்கள் வழியாக இளையோர்கள் தங்கள் கருத்துக்களை சிறப்பாக எடுத்துரைத்தனர். 4.15 மணியளவில் நான்காம் அமர்வு ஆரம்பமானது. கடவுளின் திட்டத்தை கண்டறிதல் என்ற தலைப்பை மையமாகக் கொண்டு அருட்சகோதரி ரீமா அவர்கள் நான்காம் அமர்வை வழிநடத்தினார். 7 மணியளவில் குழு



விவாதம் நடைபெற்றது. இரவு 8.30 மணியளவில் இளைஞர்களை உற்சாக மூட்டும் வகையில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மூன்றாம் நாளான ஜூன் 29, ஞாயிற்றுக்கிழமை காலை 6.45 மணியளவில் மேதகு

ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது. தொடர்ந்து ஆயர் அவர்கள் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது. தொடர்ந்து 09.30 மணியளவில் முதல் அமர்வு ஒன்றானது அருட்சகோதரி சீலியா FCC அவர்களால் வழிநடத்தப்பட்டது. 11.30 மணியளவில் நடைபெற்ற இரண்டாம் அமர்வின் போது பேசிய தந்தை இளையோர்களால் அனைத்தும் செய்ய தங்களை தாங்களே வடிவமைக்க வேண்டும் என்றும் கூறியதோடு இளையோர்களுக்கு தன்னம்பிக்கை மிகுதியாக இருக்க வேண்டும் என்றும் அறிவுரை கூறினார்கள். தலைமைத்துவ பயிற்சி முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் நடுவண் செயற்குழு ஆலோசகர் செல்வன் அஜித் அவர்கள் நன்றி கூறினார். இறுதியாக SMYM இளையோர் இயக்க கீதத்துடன் தலைமைத்துவ பயிற்சி முகாம் நிறைவுப் பெற்றது.

**செயலர்,**
**செல்வி ஜினோ**

## சீனாய் இறையியல் கல்லூரி



ஜூன் 08, படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் வைத்து தக்கலை மறைமாவட்டத்தின் சீனாய் இறையியல் கல்லூரியின் புதிய இயக்குனராக பொறுப்பேற்றிருக்கும் அருட்தந்தை சிஜோ ஜோஸ் ஐக்கரக்குந்நேல் அவர்களிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டது. இந்நிகழ்வில் இறையியல் கல்லூரியை மிகச் சிறப்பாக வழி நடத்தி வந்த முன்னாள் இயக்குனர் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அடிகளாருக்கு நன்றியும் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது. மேலும் இயக்குனர் தந்தை அவர்கள் இறையியல் பயில ஆர்வம் உடையவர்கள் சீனாய் இறையியல் கல்லூரியில் சேர்ந்து பயன்பெறவும் கேட்டுக்கொண்டார்.

# இல்வாழ்வு இயக்கம்

## தக்கலை மறைமாவட்டம்



உறவுகள் இல்லாமல் மனித வாழ்வு மலராது அர்த்தமும் பெறாது உண்மையான ஆழமான அன்புறவால் தான் குடும்பங்கள் கட்டி எழுப்பப்படுகின்றன. இந்த குடும்பங்கள்தாம் சமூக அன்பின் அடித்தளமாக அமைந்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குகின்றன. இதேபோல் திருச்சபை என்கிற கிறிஸ்தவ விசுவாசம் சமூகத்திற்கும் குடும்பங்களுக்கும் ஆணிவேரும் அடித்தளமும் ஆகும். நல்ல குடும்பங்களை உருவாக்காமல் திருச்சபை வளர முடியாது. எனவே அதனை உருவாக்குவது திருச்சபையின் தலையாயப் பணியாகும்.

இதன் அடிப்படையில் திருமண வாழ்வுக்குத் தங்களையே தயாரிக்கும் இளையோருக்கு திருமண ஆயத்த வகுப்புகள் ஜூன் 13,14 ஆகிய நாட்களில் இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இவ்வகுப்பானது பல அருட்தந்தையர்கள் மற்றும் ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் பலர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்ற பழமொழிக்கேற்ப தாய்மார்களின் முகப்பொலிவை அக அழகுடன் மேம்படுத்த சைதன்னியா வகுப்பு ஆக்கமும், ஊக்கமும் அழிக்கிறது.

தாய்மார்களின் குடும்ப சுமைகள் அதிகரித்துவரும் நாட்களில் தங்களுடைய ஆரோக்கியத்தை மறந்து விடுகிறார்கள். ஆரோக்கியத்தை மேம்படுத்த எளிமையான முறையில் அவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

- உணவு பழக்க வழக்கம்
- உடற்பயிற்சி




- மன அழுத்தத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு சைதன்னியா வகுப்பு மிகவும் பயனுள்ளதாக அமைகிறது.

ஜூன் 7-ம் தேதி நித்திரவிளை மறைவட்டத்திலும், ஜூன் 15-ம் தேதி தக்கலை பிலாங்காலை மறைவட்டத்தில் சைதன்னியா வகுப்பு நடைபெற்றது. தக்கலை பிலாங்காலை மறைவட்டத்தில் நடைபெற்ற சைதன்னியா வகுப்பானது மிகவும் சிறந்த முறையில் நடைபெற்றது. தாய்மார்களின் பங்கேற்பு அதிகமாக இருந்தது. இந்த சைதன்னியா வகுப்பானது தாய்மார்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்து வருகிறது.

ஜூன் 15-ம் தேதி தக்கலை - பிலாங்காலை மறைவட்டத்தில் மாதர் ஜோதிஸ் இயக்கத்திற்கு புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்டவர்களின் விபரம் பின்வருமாறு

தலைவர் - திருமதி. ஷைலா - பிலாங்காலை

துணை தலைவர் - திருமதி. ஜெப ஷைனி - தக்கலை

செயலர் - திருமதி. சந்திரமதி -நாகர்கோவில்

துணை செயலர் - திருமதி. எல்பா ஷெழி - பரைக்கோடு

பொருளர் - திருமதி. ஜெஸி - கைசாலவிளை

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***




# வின்சென்ட்-தே-பவுல் சபை

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் கிளை சபையில் தொடங்கப்பட்ட மன நோயாளிகளுக்கு உணவு வழங்கும் திட்டம் கடந்த 6 மாதமாக நடைபெறுவதோடு, மூன்றாம் ஞாயிறான 15-ஆம் தேதி, 10 மன நோயாளிகளுக்கு கருங்கல் மற்றும் மிடாலக்காடு ஆகிய இடங்களில் சென்று உணவு வழங்கப்பட்டது. சேனங்கோடு பகுதியை சேர்ந்த செல்வி. அபி திருவனந்தபுரம் ஆர்சிசி மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அச்சிறுமியின்



மருத்துவ உதவிக்காக கிளைசபையின் சார்பாக ரூபாய் 7000 அவரது வங்கி கணக்கில் 3 முறையாக வழங்கியுள்ளோம்.

மார்த்தாண்டம் புனித தேவசகாயம் கிளைசபை சார்பாக ஒரு மாணவருக்கு உயர்கல்வி பயில்வதற்காக கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

***சகோ. D.Pஷாஜி***
***தகவல் தொடர்பு அலுவலர்***

# உறவிய மலர்

**உறவிய பொறுப்பாளர்களின் கூட்டம்**

மறைமாவட்ட அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகளின் இடமாற்றத்திற்கு பிறகு உறவிய மறைவட்ட இயக்குனர் தந்தையர்கள் மற்றும் ஆனிமேட்டேர்ஸ் அருட்சகோதரிகளின் முதல் கூடுகை படந்தாலும்மூடு திருஇருதய மறைவட்ட ஆலயத்தில் ஜூன் 7ம் தேதி, புதிய இயக்குநர் அருட்தந்தை மிஜோ செபாஸ்டின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் 2025-ம் ஆண்டு நடக்கவிருக்கும் நிகழ்வுகள் குறித்தும் முக்கியமாக கிறிஸ்து யூபிலி கொண்டாட்டத்தைப் பற்றியும் விவாதிக்கப்பட்டது.

**மறைவட்ட இயக்குநர்கள் மற்றும் ஆனிமேட்டர்ஸ் அருட்சகோதரிகளின் பெயர் பட்டியல்**

மறைமாவட்ட இயக்குநர் - அருட்தந்தை மிஜோ செபாஸ்டின்
மறைமாவட்ட ஆனிமேட்டர் - அருட்சகோதரிஜோதிஸ் FCC

**மறைவட்ட இயக்குனர் தந்தையர்கள்**

ஆறுகாணி - அருட்தந்தை ஜோசப் ஆனித் தோட்டம் CMI
களியல் - அருட்தந்தை ஜஸ்டின் சுதீஷ்
மஞ்சாலும்மூடு - அருட்தந்தை சந்தோஷ் கையாலப்பறம்பில் CMI
நித்திரவிளை - அருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம்
படந்தாலும்மூடு - அருட்தந்தை ஜிஜி புத்தன்புரைக்கல்
சூசைபுரம் - அருட்தந்தை டோஜி செபாஸ்டின்
தக்கலை - பிலாங்காலை அருட்தந்தை குரியன் கோயிப்புறம்
தென்காசி - அருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல்

**மறைவட்ட ஆனிமேட்டேர்ஸ்**

ஆறுகாணி - அருட்சகோதரி மரீனா SH
களியல் - அருட்சகோதரி ஆன்மரியா CMC
சூசைபுரம் - அருட்சகோதரி விமலா SABS
நித்திரவிளை - அருட்சகோதரி எல்சீனா ASMI

மஞ்சாலும்மூடு - அருட்சகோதரி லிசா SH
தக்கலை - பிலாங்காலை - அருட்சகோதரி ஜீனா FCC
படந்தாலும்மூடு - அருட்சகோதரி ஆனி MMM

**உறவிய சிறப்பு நிகழ்வுகள் மற்றும் கிறிஸ்து யூபிலி கொண்டாட்டம்**

ஜூலை 12, மஞ்சாலுமூடு மற்றும் களியல் மறைவட்ட உறவிய பணியாளர்களுக்கான ஒரு நாள் தியானம். (பங்கேற்பாளர்கள்: பங்கு ஆனிமேட்டேர்ஸ், ஒருங்கிணைப்பாளர்கள், தலைவர்கள், இளைமை பொறுப்பாளர்கள்.

ஜூலை 19, படந்தாலும்மூடு மற்றும் நித்திரவிளை மறைவட்ட உறவிய பணியாளர்களுக்கான ஒரு நாள் தியானம்.

ஆகஸ்ட் 9, சூசைபுரம் மற்றும் தக்கலை - பிலாங்காலை மறைவட்ட உறவிய பணியாளர்களுக்கான ஒரு நாள் தியானம்.

ஆகஸ்ட் 23, தென்காசி திருத்தொண்டு தள உறவிய பணியாளர்களுக்கான ஒரு நாள் தியானம்.

செப்டம்பர் 6, ஆறுகாணி மறைவட்ட உறவிய பொறுப்பாளர்களுக்கான ஒரு நாள் தியானம்.

செப்டம்பர் 21, கிறிஸ்து யூபிலி கொண்டாட்டம், கல்லுவிளை.

## மறைமாவட்டத்திற்கு புதிதாக வந்துள்ள அருட்தந்தையர்களை வரவேற்றல்



# கன்னியாகுமரி
## சமூக சேவை சங்கம்

### புனித அந்தோணியார் திருநாள்

கன்னியா குமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் தந்தையின் பெயர் கொண்ட விழா ஜூன் 19 தேதி நடைபெற்றது. இயக்குநர் அருட்தந்தை. ஆன்றனி மகேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இயக்குநர் தந்தை தலைமையுரையாற்றும் போது புனித அந்தோணியார், கிறிஸ்தவ மதவாதியாக மட்டுமல்லாமல் சீர்திருத்தவாதியாகவும் இருந்தவர். அந்தோணியார் தமது வாழ்நாள் முழுவதும் அன்பையும், ஏழ்மையையும், தாழ்ச்சியையும், ஞானத்தையும் அணிகலன்களாக அணிந்திருந்தார். நற்செய்தியின் இறைமனிதர், உலகின் உலகின் மாபெரும் புனிதர் திருச்சபையின் மறைவல்லுநர் காலத்தின் அறிகுறிகளைத் தெரிந்து திருமறையைப் பாதுகாத்த இறைவாக்கினர். நற்செய்தியைச் சொல்லாலும் செயலாலும் வாழ்வாலும் அறிவித்த இறைதூதர். திருச்சபையின் மாணிக்கமாய்த் திகழ்ந்தவரே புனித அந்தோணியார். அவர் வழியாக அனைத்து நலன்களும் அனைவருக்கும் கிடைக்கட்டும் எனக் கூறினார். S.A.F.P திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. விஜயராஜன் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி பேசும் போது புனித அந்தோணியார், நல்லதோர் குடும்பத்தில் பிறந்து, தெய்வ பக்தியில் மூழ்கி, பெற்றோரின் அன்புக்கு கீழ்படிந்து, இறை குடும்பத்தில் குறை மனிதர்களை சேர்த்து, மறை மொழியால் நிறை வாழ்வில் மக்களை ஈன்ரெடுத்தார் புனிதர். அவரின் பரிந்துரையால் குடும்பங்களில் நல்லுறவு, உடல் நலம், தொழில் வளம், கல்வி வளம், மனை வளம், எதிர்பாராத அதிர்ஷ்டம், எதிர் நோக்கும் ஆசீர்கள் இன்றும் சொல்லில் அடங்காத புதுமைகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. அவரின் பெயர்கொண்ட இயக்குநர் தந்தை அவர்களுக்கு அந்தோணியார் திருநாள் வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன் என்றார். இந்நிகழ்வில் K.K.S.S.S. பணியாளர்கள், நிதிபணியாளர்கள் நிறுவனப்பணியாளர்கள் மற்றும் களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## சிறப்பு பள்ளி மாணவர்களின் பெற்றோருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி

ஜூன் 20 ஆம் தேதி, நித்திரவிளை புனித மரியன்னை சிறப்பு பள்ளியில், கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் CTWWC திட்டக் குழுவினரால், மாற்றுத்திறனுடைய சிறார்களின் பெற்றோர்களுக்கு சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை மேலும் புரிந்து கொள்ளவும், உறுதியோடு வாழ்க்கையை எதிர்கொள்ளவும் வழிகாட்டுவதே இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாக அமைந்தது. திட்டப் பணியாளர்கள் நிகழ்ச்சியை வழிநடத்தினார்கள். அவர்கள் உரையை தொடங்குகையில் அனைவரையும் சிரிப்பூட்டி 'சிரித்து வாழ வேண்டும்' என்ற சொல்லோடு தொடங்கினார். இந்த சொல், "சிரிப்பு, ஏற்றுக்கொள்ளும் மனநிலை மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கை" என்பவற்றை மையமாகக் கொண்டது.

விழிப்புணர்வு வகுப்பு முழுவதும் இந்த உணர்வுகள் மேலோங்கும் வகையில் செயல்பாடுகள் நடைபெற்றது. வெறும் உரையாக இல்லாமல், பெற்றோர்களை நேரடியாக ஈடுபடுத்தும் பல செயல்பாடுகள் நிகழ்த்தப்பட்டன. இந்தச் செயல்கள் மூலம் பெற்றோர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினர். நிகழ்ச்சியில், குழந்தைகளின் நடத்தைகளை புரிந்து கொள்வது, எதிர்காலத்திற்கான நம்பிக்கையை வளர்ப்பது, பெற்றோர்களின் மனநிலையை உறுதிபடுத்துவது, தன்னம்பிக்கையை வளர்த்தல், எளிய வெற்றிகளை கொண்டாடுவது போன்ற முக்கியமான கருத்துகள் பகிரப்பட்டன. இதற்கான நடைமுறை உதாரணங்களும் விளக்கப்பட்டது. மேலும் பெற்றோர் தங்களது வாழ்க்கைப் பிரச்சனைகள், மனதில் ஏற்படும் குழப்பங்கள், அன்றாட போராட்டங்களை வெளிப்படையாக பகிர்ந்துகொண்டனர். சிலர், 'அவர்கள் தனியாக இல்லை' என்பதையும் மேலும் சிலர் அவர்களின் வாழ்க்கை அனுபவங்களையும் குழந்தைகளை சிறப்பாக வளர்ப்பதற்கான சிறு சிறு வழிமுறைகளையும் பகிர்ந்து கொண்டனர். CTWWC குழுவினர் வாழ்க்கை சார்ந்த உண்மை நிகழ்வுகளை எடுத்துக்காட்டியதன் மூலம் பெற்றோருக்குள் நம்பிக்கையும், எதிர்காலத்தை நோக்கிய விழிப்புணர்வும் உருவானது. வழிகாட்டும் வார்த்தைகள், உணர்வுபூர்வமான அணுகுமுறைகள், பெற்றோரின் மனதிற்கும் உள்ளத்திற்கும் ஊக்கம் அளித்தது. இந்த சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி பெற்றோரின் மனங்களில் புதிய ஒளியைக் கொட்டிய வழியாக மாறி, எதிர்காலத்தை புன்னகையோடு எதிர்கொள்ளும் உந்துதலாக திகழ்ந்தது.

# கேட்கீப்பிங் தொடர்பான குழந்தைகள் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி



கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படும் CTWWC குழு, ஜூன் மாதம் அன்னிகரை (ஜூன் 8), சூசைபுரம் (ஜூன் 15), மற்றும் காரோடு (ஜூன் 22) ஆகிய இடங்களில் பங்குப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் பங்கு உறுப்பினர்களுக்காக 'கேட்கீப்பிங்' பயிற்சிகளை நடத்தியது. இந்த பயிற்சிகள், பின்தங்கிய சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளை பாதுகாக்கவும், அவர்களுக்கு தேவையான ஆதரவும் பராமரிப்பும் பெறச் செய்யவும் சமூகத்தில் விழிப்புணர்வையும் பொறுப்பையும் வலுப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டது.

இந்த பயிற்சிகளில் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டது மட்டுமல்லாமல், தங்கள் குழந்தைகள் குறித்த தெளிவான புரிதல்களை பெற்றனர். பங்கு உறுப்பினர்கள் ஆபத்துக்குள்ளான குடும்பங்களை விரைவில் அடையாளம் காணும் திறனையும் தேவையான சேவைகளை அவர்களுடன் இணைப்பது எப்படி என்பதையும் கற்றனர், மேலும் தங்களது சமூகத்தில் குழந்தைகளை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபடத் தயாரானார்கள்.

இந்த பயிற்சிகள் பங்கு உறுப்பினர்களிடையே புதிய விழிப்புணர்வையும் ஒன்றுபட்ட எண்ணத்தையும் உருவாக்கின. தங்கள் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு குழந்தையின் நலனை பாதுகாக்கும் பொறுப்புணர்வு

தற்போது அதிகமாக உள்ளது என்றும், குடும்பங்களில் சிரமம் தெரிந்தால் உடனடியாக உதவ தயாராக இருக்கிறோம் என்றும் பலர் பகிர்ந்து கொண்டனர்.

அடுத்த கட்டமாக, இந்த பணியை தொடர்ந்து செயல்படுத்த, CTWWC குழு பங்குகளில் குழந்தைகள் பாதுகாப்பு குழுக்களை உருவாக்க வேண்டும் ஒவ்வொரு குழந்தையும் அவரது குடும்பத்தால் மட்டுமல்லாமல், அக்கறையுள்ள பங்கு சமூகத்தால் பாதுகாக்கப்படும் வலுவான அடித்தளத்தையும் உருவாக்கி கொள்ள வேண்டும் என்று கூறினார்கள்.

ஜூன் 18-ஆம் தேதி, கத்தோலிக்க நிவாரண சேவைகள் (CRS) சார்பில் CTWWC திட்டக் குழுவினர், திட்ட செயல்பாடுகள் மற்றும் மேம்பாட்டை ஆய்வு செய்ய கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் (KKSSS) CTWWC திட்ட அலுவலகத்துக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் செல்வி சஞ்சனா மற்றும் CRS ஆலோசகர் அருட்தந்தை. செலஸ்டின் ஆகியோர் வருகை தந்தனர்.. அவர்கள் திட்டக்குழுவினருடன் gatekeeping செயல்முறை மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள மாற்றுப்பணிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதையும் கேட்டு தெரிந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பு இதமான வரவேற்புடன் தொடங்கியது. அதன் பின்னர், திட்டத்தின் தற்போதைய செயல்பாடுகள், அனுபவங்கள், மற்றும் சமூகத்துடன் கொண்டிருக்கும் ஈடுபாடு குறித்து விரிவான விவாதம் நடைபெற்றது. குழந்தைகள் பாதுகாப்பு துறையில் ஆழ்ந்த அனுபவம் கொண்ட அருட்தந்தை செலஸ்டின், KKSSS CTWWC குழுவின் அர்ப்பணிப்பு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட செயல்பாடுகளை பாராட்டினார். குறிப்பாக, பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளை அடையாளம் காணும் முயற்சியும், தேவையற்ற பிரிவுகளைத் தடுக்கும் செயல்பாடுகளும், குடும்ப அடிப்படையிலான பராமரிப்பை ஊக்குவிக்கும் முயற்சிகளை இன்னும் சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

மாற்று செயல்முறை (Transition) தொடர்பாக அருட்தந்தை செலஸ்டின் அவர்கள் ஆலோசனைகளையும் திட்டமிடலின் பராமரிப்பு, மீண்டும் 7 குடும்பத்துடன் இணைக்கப்பட்ட குழந்தைகளின் கண்காணிப்பு, மற்றும் குடும்பங்களைச் சுற்றி நீடித்த ஆதரவை உருவாக்குவது ஆகியவையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தி கூறினார். குடும்பப் புனரமைப்புகள்,

பரிந்துரை செயல்முறைகள், மற்றும் உள்ளூர் gatekeeping நடைமுறைகள் குறித்து குழுவிடம் சிந்தனையுள்ள கேள்விகளை எழுப்பினார். இந்தச் சந்திப்பு, குழுவுக்கு மேலும் தங்களது பணிகளை சிறப்பாக செயல்படுத்த ஊக்கமளித்தது.

திட்டக்குழுவுடன் நடைபெற்ற கலந்துரையாடலுக்குப் பின்னர், CRS குழுவினர் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குனர் அருட்தந்தை ஆன்றனி மகேஷ் யைச் சந்தித்தனர். திட்டத்தின் நோக்கம், மதிப்புகள் மற்றும் குடும்ப அடிப்படையிலான குழந்தைப் பராமரிப்பில் திருச்சபையின் பங்குகள் குறித்து அர்த்தமுள்ள உரையாடல் நடந்தது. CTWWC திட்டத்தின் செய்தியை மேலும் பல சமூகங்களுக்கு விரிவாக்குவதற்கான கூட்டாண்மையை வலுப்படுத்தும் வழிகள் குறித்தும் பேசப்பட்டன.

CTWWC திட்டத்தின் அடிப்படை நோக்கம் "ஒவ்வொரு குழந்தையும் பாதுகாப்பான, அக்கறை கொண்ட குடும்பத்தில் வாழ வேண்டும்; ஒவ்வொரு சமூகமும் அதை சாத்தியமாக்கும் பங்காளர்" ஆக வேண்டும் என்ற எண்ணத்துடன், குழுவினர் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்பதை இந்தச் சந்திப்பு வழங்கியது.

**உலக சுற்றுச்சூழல் தினம்**

ஒவ்வொரு ஆண்டும், இயற்கை தொடர்பான பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஜீன் 5ல் உலக சுற்றுச்சூழல் தினம் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தால் அனுசரிக்கப்படுகிறது.

இந்த வருடம் 28 மையங்களில் உலக சுற்றுச்சூழல் தினம் நடைபெற்றது. விழாவில் ஜீன் 4 தேதி மஞ்சாலுமூடு மையத்தில் இயக்குநர் அருட்தந்தை. மகேஷ் அவர்கள் அவர்கள் தலைமையிலும் மற்ற மையங்களிலும் மைய பங்கு தந்தையர்கள் தலைமையிலும் நடைபெற்றது C.L.F பொறுப்பாளர்கள்,சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து பிளாஸ்டிக்கை குறைத்தல் என்ற கருத்தினை மையமாக வைத்து மரம் நடுதல், மரக்கன்றுகளை இலவசமாக வழங்குதல் மற்றும் பிளாஸ்டிக் இல்லாத வளாகம் உருவாக்குதல் போன்றவை நடைபெற்றது. இந்த நிகழ்வுகளை அந்த ஏரியா களப்பணியாளர்கள் ஒருங்கிணைத்தார்கள்.

***அருட்தந்தை மகேஷ்,***

***செயலர்***

# அருட்சகோதரர்களிடமிருந்து

**"தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன்; நீ பிறக்குமுன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்."(எரே 1:5)**

அருட்சகோதரர்கள் தங்களுடைய இரண்டரை மாதம் விடுமுறைக்கு பின் உயர் குருமடங்களுக்கு திரும்பினார்கள். மேலும் இந்த ஆண்டு புதிதாக ஒரு அருட்சகோதரர் தத்துவயியல் பயிலவும், மூன்று அருட்சகோதரர்கள் இறையியல் பயிலவும் உயர்குருமடங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் நலமாக உள்ளார்கள். உரோமையில் இறையியல் படித்துவரும் அருட்சகோதரர் ஜூபின் அவர்களின் தந்தை திடீரென மரணடைந்தார். அவருக்கு மறைமாவட்டம் சார்பாக இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. இதில் அருட்சகோதரர்கள் கலந்துகொண்டு அவரது ஆன்ம இளைப்பாறுதலுக்காக ஜெபித்தனர்.

**இப்படிக்கு**
**அருட்சகோ திவின் ராஜ் D S & டெபின்**

## பேராயருக்கு நன்றியும், பாராட்டும்

தென்னிந்திய திருச்சபையின் பேராயராக கடந்த ஆறு ஆண்டுகளாக (2019-2025) பணியாற்றிய பேராயர் Dr.செல்லையா அவர்களின் பணி நிறைவினை ஒட்டி குமரி கிறிஸ்தவர் ஐக்கிய பேரவை சார்பாக 9-6-2025 அன்று கோட்டாறு ஆயர் இல்லத்தில் வைத்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது. தக்கலை மறைமாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன்,SDB அவர்கள் பேராயரின் பணிகளை சிறப்புற வாழ்த்தி பொன்னாடை போர்த்தினார். பேராயர் அவர்கள் கிறிஸ்தவர் ஐக்கிய பேரவையின் மேலாண்மை குழு உறுப்பினராகவும், மகளிர் அணியின் தலைவராகவும் செயல்பட்டது குறிப்பிடத்தக்கது.



# மறைமாவட்டச் செய்திகள்

## அருட்தந்தையார்களுக்கான வழிகாட்டுதல் நிகழ்ச்சி

இந்த ஆண்டு மறைமாவட்டத்திற்கு புதிதாக வந்துள்ள அருட்தந்தையார்களுக்கு 5 ஜூன் 2025 அன்று ஆயர் இல்லத்தில் மறைமாவட்டம் குறித்த வழிகாட்டுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. பங்கேற்பாளர்கள் அருட்தந்தை பாபி கொச்சுபரம்பில் MST, அருட்தந்தை ஜோ ஏஞ்சலோ SDB, அருட்தந்தை ஜிஜி புத்தன்புரக்கல், சகோ. ஜோபின் வெட்டுகல்லேல், மற்றும் சகோ. ஜான் ஊரோத் ஆகியோர் காலை 10:00 மணிக்கு பேரருட்தந்தை தாமஸ் பவத்துபரம்பில் அவர்கள் வரவேற்று நிகழ்வினை தொடங்கி வைத்தார். தொடர்ந்து மூன்று அறிவூட்டும் அமர்வுகள் இருந்தன. முதல் அமர்வு அருட்தந்தை ஆண்டனி ஜோஸ் அவர்கள், தக்கலை மறைமாவட்டத்தின் கலாச்சார சூழலை அறிமுகப்படுத்தி, மறைபரப்பை தொடங்குவதற்கான அத்தியாவசியமான விஷயங்களை எடுத்துரைத்தார். பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் அவர்கள், மறைமாவட்டக் கொள்கைகள் மற்றும் அருட்தந்தையர்கள் மற்றும் திருச்சபை நிர்வாகம் தொடர்பான சிறந்த நடைமுறைகளை விவரித்தார். அருட்தந்தை ஜஸ்டின் செருவேலில் அவர்கள், நமது மறைமாவட்டத்தில் நடைபெறும் வழிபாட்டு முறைகளை விளக்கினார். அருட்தந்தை ஜோ ஏஞ்சலோ அவர்கள், புதிதாக வந்துள்ள அருட்தந்தையர்களின் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார். மதியம் 1:30 மணிக்கு மதிய உணவுடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

## மாலைக்கோடு கன்னியர் இல்ல சிற்றாலயம் மந்திரிப்பு

2025 ஜூன் 5, மாலை 6:30 மணியளவில் மலைக்கோட்டில் SH கன்னியர் இல்லத்தில் புதுப்பிக்கப்பட்ட சிற்றாலயம் மந்திரிக்கப்பட்டது. விழாவிற்கு ஆயர் அவர்கள் தலைமை தாங்கினார். மறைமாவட்ட கியூரியா உறுப்பினர்கள் மற்றும், மறைமாவட்டத்தை சேர்ந்த அருட்தந்தையர்கள் இந் நிகழ்வில் பங்கேற்றனர்.

## மதுரை மிஷனின் கிறிஸ்து ஜூபிலி

நமது மறைமாவட்ட மிஷனரிகளின் கிறிஸ்து ஜூபிலி கொண்டாட்டம் ஜூன் 12, மதுரை - அரியூர் புனித மேரி ஆலயத்தில் நடைபெற்றது. ஏழு அருட்தந்தையர்கள் உட்பட பதினேழு மறைபரப்பு பணியாளர்கள் மற்றும் மறைமாவட்ட கியூரியா உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு ஆயர் அவர்கள் தலைமை தாங்கினார். அருட்தந்தை டோபின் ஆலபுரக்கல் இந்நிகழ்வினை வழிநடத்தினார். பங்கேற்பாளர்கள் அருட்தந்தை ஜெபனேஷ் அவர்களை எதிர்கால மறைப்பரப்பு கூட்டங்களுக்கு செயலாளராக ஏகமனதாக தேர்ந்தேடுத்தனர்.

அனைத்து விரிவாக்கப்பட்ட மறைபரப்பு தளங்களிலிருந்தும் சென்னை,

மைலாபூருக்கு புனித பயணம் செல்வதற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. ஆயரது திருப்பலியுடன் கூட்டம் நிறைவுற்றது.

### மூலமற்றத்தில் நோய்த்தடுப்பு சிகிச்சை பிரிவு தொடக்கம்

திருமதி மெர்சி ஜோஸின் பெருந்தன்மைக்கு மற்றொரு சான்றாக, நோய்த்தடுப்பு சிகிச்சை பிரிவுக்கான புதிய கட்டிடம் ஜூன் 13, மாலை 5:00 மணிக்கு மந்திரிக்கப்பட்டது. விழாவிற்கு சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர் மார் ரபேல் தட்டில் அவர்கள் தலைமை தாங்கினார். மந்திரிப்பை தொடர்ந்து பொதுக்கூட்டம் நடைபெற்றது. முக்கிய விருந்தினர், கேரள நீர்ப்பாசன அமைச்சர் திரு. ரோஷி அகஸ்டின் அவர்கள் உயர் பேராயர் மார் ரபேல் தட்டில் உடன் கலந்துரையாடினார். திருமதி மெர்சி ஜோஸ் ஒரு "நல்ல சமாரியன்" என்றும், ஏழைகளுக்கு இரக்கமுள்ள சேவை செய்வதில் இவர் ஓர் முன்மாதிரி என்றும் திரு. ரோஷி அகஸ்டின் அவர்கள் பாராட்டினார். அருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் அவர்கள் நன்றியுரை வழங்கினார். இந்த அழகான கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்ததற்காக சினேகவில்லாவின் இயக்குநர் அருட்தந்தை ஜினோய் தொட்டியில் அவர்களுக்கு ஆயர் அவர்கள் சிறப்புப் பாராட்டுக்களை தெரிவித்தார்.

### CRI–இன் கிறிஸ்து ஜூபிலி விழா

ஜூன் 14, மதியம் 2:00 மணியளவில், கல்லுவிளையில் உள்ள ஆசீர் அரங்கத்தில் கிறிஸ்து ஜூபிலி விழா நடைபெற்றது. பிற்பகல் 3:00 மணிக்கு முன்னதாக கோட்டயத்தின் சர்கஷேக்த்ரா வானொலியின் இயக்குனர், அருட்தந்தை சிஜோ சென்னாட் CMI அவர்கள் நவீன காலத்தில் மத சமூகங்கள் எவ்வாறு தொடர்புடையதாக இருக்க முடியும் என்பதை ஒரு மணிநேரம் விளக்கினார். கிறிஸ்து ஜூபிலி விழாவை திறம்பட ஒருங்கிணைத்ததற்காக CRI இன் தலைவர் அருட்சகோதரி ஜெஸ்ஸி தெரேஸ் அவர்களுக்கு ஆயர் அவர்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

### அருட்பணியாளர்கள் கூடுகை மற்றும் மறைமாவட்ட பேராலயம் குறித்த விவாதம்

2025 ஜூன் 17, சங்கமத்தில் அருட்பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றது. அருட்தந்தை பாபி கொச்சுபறம்பில் (MST) அவர்கள் தலைமையில் ஒரு மணி ஆராதனை நடைபெற்றது. ஆயர் அவர்கள் தலைமையில், பேரருட்தந்தை தாமஸ் பவத்துபரம்பில் அவர்கள் வழிநடத்த 11:00 மணியளவில் கூடுகை தொடங்கியது. அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமதில் அனைவரையும் அன்புடன் வரவேற்றார். இக்கூடுகையில் மறைமாவட்டத்திற்கு பேராலயம் கட்டமைப்பதை பற்றிய விவாதம் ஐந்து நிலைகளில் வழங்கப்பட்டது.

**முதல் நிலை:** பகுத்தறிவு - மறைமாவட்டத்திற்கு பேராலயம் ஏன் தேவை என்பதைப் பற்றிய ஒரு பிரதிபலிப்பு.

**இரண்டாம் நிலை:** கட்டமைப்புத் திட்டம் – குருகுல முதல்வர் முன்மொழியப்பட்ட வடிவமைப்பு மற்றும் அமைப்பைக் கோடிட்டுக் காட்டுகிறார் .

**மூன்றாம் நிலை:** குழு விவாதம் - அருட்தந்தைகள் ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, திட்டத்தைப் பற்றிய மூன்று முக்கிய கேள்விகளைப் பற்றி விவாதிக்க அழைக்கப்பட்டனர்.

**நான்காம் நிலை:** இறைமக்களை தயார் செய்தல் - இறைமக்கள் ஆன்மீகமாகவும், மறை பணிக்கு தயாராகும்படி முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

**ஐந்தாம் நிலை:** நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை - வரைவுத் திட்டத்தை இறுதி செய்து திட்டத்தை முன்னோக்கி நகர்த்த ஒரு முக்கிய குழு முன்மொழியப்பட்டது.
குழு விவாதங்களைத் தொடர்ந்து, ஒவ்வொரு குழுவிலிருந்தும் பிரதிநிதிகள் எழுப்பப்பட்ட முக்கிய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். விவாதங்களின் அடிப்படையில், கீழ்க்கண்ட அருட்தந்தையர்கள் முக்கிய உறுப்பினர்களாக பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பட்டனர். அருட்தந்தை ஜேக்கப் ஐயமாத்ர, அருட்தந்தை ஆண்டனி ஜோஸ், அருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், அருட்தந்தை டென்சி முண்டுநடக்கல், அருட்தந்தை மேத்யூ அரேக்களம் CMI, அருட்தந்தை ஜான்சிலால் அரக்கபரம்பில் மற்றும் கியூரியா உறுப்பினர்கள். மதியம் 2:15 மணிக்கு இறுதி ஆசீர்வாதத்துடன் கூட்டம் நிறைவடைந்தது.

## பள்ளிக்கோணம் திரு இருதய ஆலய பொன்விழா

ஆலயத் திருவிழா மற்றும் பொன்விழா ஜூன் 22 முதல் 29 வரை சிறப்புற நடைபெற்றது. தக்கலை மறை மாவட்ட முதல் ஆயரும் சீரோ மலபார் திருச்சபையின் மேனாள் உயர் பேராயருமான கர்தினால் மார் ஜார்ஜ் அலஞ்சேரி புதிய கொடிமரத்தை அர்ச்சித்து கொடியேற்றி திருப்பலியும் நிறைவேற்றி முதல் திருவிருந்தும் வழங்கினார் . குருகுல முதல்வர் பேரருள்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் முன்னிலை வகித்தார். இரண்டு மற்றும் மூன்றாம் நாள் நற்செய்தி பெருவிழாவும் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும் நடைபெற்றது. நிறைவு நாள் 29 ஆம் தேதி மாலையில் ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் பொன்விழா நன்றித் திருப்பலியும் பொது கூடுகையும் நடைபெற்றது. இதில் பல்சமய தலைவர்கள் பங்கேற்றனர். திருவிழா நாட்களில் பங்கில் பணியாற்றிய அருள் தந்தையர் மற்றும் அருள் சகோதரிகள் கௌரவிக்கப்பட்டனர். அனைத்து ஏற்பாடுகளையும் பங்குத்தந்தை லூக்கா கொல்லம்பறம்பில் பங்கு பொறுப்பாளர்களோடு இணைந்து செய்திருந்தார்.

# மறைவட்டச் செய்திகள்

## தக்கலை – பிலாங்காலை

### ▶ புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை



2025 ஜுன் 2, பள்ளிக்கூடங்கள் திறப்பை முன்னிட்டு காலையில் திருப்பலி முடிந்த உடன் பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டு ஆசிர் வழங்கப்பட்டது. 8ம் தேதி மறைக்கல்வி துவக்க விழா மற்றும் மாதர் ஜோதிஸ் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. பெந்தேகோஸ்தே திருவிழாவை முன்னிட்டு புதிதாக பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு பங்குதந்தையால் அரிசியில் குழந்தைகளின் கைகளை பிடித்து முதல் எழுத்து எழுதுதல் நிகழ்வு நடைபெற்றது. மதியம் 3 மணிக்கு கீ போர்டு வகுப்புகள் பங்குதந்தை ஆசிர்வதித்து தொடங்கி வைத்தார். 13 ம் தேதி புனித அந்தோணியார் திருவிழா அன்று மாலை 6 மணிக்கு திருப்பலி மற்றும் நேர்ச்சை மற்றும் புனித அந்தோணியார் உறவியத்தின் ஆண்டுவிழா நடைபெற்றது. 14 ம் தேதி நோயாளிகளுக்கான திருப்பலி, ஆராதனை, தைலம் பூசுதல் மற்றும் நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது. 15 ம் தேதி ஆலயத்தில் தந்தையர்கள் தினத்தை முன்னிட்டு அனைத்து தந்தையர்களுக்கும் ஆசிர்அளித்து இனிப்பு வழங்கினார். மாலையில் புனித அன்னை மரியாள் உறவியத்தின் ஆண்டுவிழா நடைபெற்றது. 22 ம் தேதி மிஷன்லீக் இயக்கத்தின் இந்த வருட துவக்க விழா நடைபெற்றது. 26 ம் தேதி ஆலயத்தில் இருந்து பெங்களூர் மைசூர் வேளாங்கன்னி,

கொடைக்கானல் போன்ற இடங்களுக்கு சுற்றுலா செல்லப்பட்டது. பெங்களூர் புனித தோமையார் கதீட்ரல் ஆலயத்திலும் வேளாங்கன்னி ஆலயத்திலும் மைசூர் ஆலயத்திலும் கொடைக்கானல் புனித சலேட் மாதா ஆலயத்திலும் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டது.

### ▶ புனித சூசையப்பர் ஆலயம் தடிக்காரன்கோணம்

மறைக்கல்வியின் இந்த வருட துவக்க விழா நடைபெற்றது. வெள்ளாம்பி மற்றும் தடிக்காரன்கோணம் ஆலயத்தில் வீடு சந்திப்பு நடைபெற்றது.

### ▶ புனித ஜார்ஜியார் ஆலயம் ஆனையடி

ஜீன் 8ம் தேதி மறைக்கல்வி துவக்க விழா நடைபெற்றது. 15 ம் தேதி உறவியக்கூட்டம் நடைபெற்றது. ஜூன் 19 ம் தேதி திவ்ய நற்கருணை திருநாள் திருப்பலி மற்றும் ஆராதனை நடைபெற்றது

### ▶ புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் காட்டாதுறை

தக்கலை மறைமாவட்டத்திற்காக இவ்வருடம் குருத்துவ அருட்பொழிவை பெற்ற அருட்தந்தையர்கள் அமான்றோ, சுனில் ஆண்டனி, அனூப் அகஸ்டின் ஆகியோர்கள் தக்கலை மறை மாவட்டம் சார்பாக காட்டாதுறை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயத்தில் வரவேற்கப்பட்டு பின் அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அருட்தந்தை அமான்றோ அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்கள். அருட்தந்தை அனூப் அகஸ்டின் அவர்கள் மறையுரை வழங்கினார்கள். இந்த சிறப்பு நிகழ்வில் பங்கு இறைமக்களால் தக்கலை மறைமாவட்ட ஆயர் அவர்களும் வரவேற்கப்பட்டார்கள். ஆயர் அவர்கள் திருப்பலியில் பங்கு கொண்டார். திருப்பலிக்கு பின் ஆயர் அவர்களால் புது குருக்களுக்கு வாழ்த்துரை கூறப்பட்டு சால்வே அணியப்பட்டது. பங்கின் சார்பாக திரு ராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். இளையோர் பாடலைப் பாடி வாழ்த்தினார். இறுதியாக அருள்தந்தை சுனில் அவர்கள் அனைவருக்கும் நன்றியை கூறினார்.

## மஞ்சாலுமூடு

### ▶ புனித குழந்தை தெரசா ஆலயம் மஞ்சாலுமூடு

ஜூன் 01, மறைக்கல்வி வகுப்புகள் தொடக்க விழா நடைபெற்றது. 2, ஆம் தேதி, பள்ளிக்கூடங்கள் திறப்பை முன்னிட்டு காலையில் திருப்பலி முடிந்த உடன் பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டு ஆசிர் வழங்கப்பட்டது. ஜூன் 19, திவ்விய நற்கருணை திருநாளை முன்னிட்டு நற்கருணை பவனி நடத்தப்பட்டது. ஜூன் 23, பங்கு தந்தை உறவிய அடிப்படையில் வீடு சந்தித்தார். ஜூன் 29, மறைக்கல்வி



10,11,12 வகுப்புகளில் படித்து தோல்வி அடைந்த மஞ்சாலுமூடு, ஆறுகாணி மற்றும் களியல் மறைவட்ட மாணவர்களுக்கு மறுதேர்வு நமது ஆலயத்தில் நடைபெற்றது. எல்லா வாரமும் வெள்ளிக்கிழமை மாலை திருப்பலிக்கு பின் சிறப்பு ஆராதனை நடைபெற்றது.

## தூசைபுரம்

### ▶ பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்

ஜூன் 01, பங்கு தந்தை அவர்கள் மறைக்கல்வி தொடக்க விழாவை குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்கள். மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை திருப்பலி, ஆராதனை மற்றும் ஒப்புரவு அருட்சாதனம் நடைபெற்றது.

### ▶ புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை



ஜூன் 01, இளையோர்கள் சார்பாக உணவுத் திருவிழா பங்கு தந்தை தலைமையில் நடைபெற்றன. மிஷன் லீக் மாணவர்கள் சார்பாக விளையாட்டு போட்டியும் நடைபெற்றன. ஜூன் 07, பங்கு தந்தையின் பிறந்த நாள் ஜூன்

11, பங்கு தந்தையின் அருட்பொழிவு நாள் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. ஜூன் 17, திருவிழாவை முன்னிட்டு வீடு சந்தித்தல் பங்கு தந்தை அவர்களால் நடத்தப்பட்டன. ஜூன் 21, மறைக்கல்வி ஆசிரியர்களின் ஜெபக்கூட்டம் திருமதி.விஜிலா அவர்களது இல்லத்தில் வைத்து அருட் தந்தை டோஜி அவர்களது தலைமையில் நடைப்பெற்றன. ஜூன் 21, இளையோர்கள் சார்பாக பங்கு தந்தை அருள்சகோதரிகள் பொறுப்பாளர்கள் உட்பட 25பேர் பெரும்-சிலம்பு சென்றனர். ஜூன் 06, திருமுழுக்கு மூன்று பேருக்கும், ஜூன் 23 ஒருவருக்கு வழங்கப்பட்டன.

### ▶ புனித தோமையார் ஆலயம் மாதாபுரம்


ஜூன் 22, திருப்பலி முடிந்தவுடன் பங்குதந்தை ஜோஸ் புரையிடகுந்நேல் அவர்களின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. ஜூன் 23, திருவிழாவை முன்னிட்டு பங்கு தந்தை தலைமையில் வீடு சந்திப்பு ஆரம்பிக்கப்பட்டது. வியாழக்கிழமைகளில் திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் நடைபெற்றன.

### ▶ தேவ மாதா ஆலயம் கிள்ளியூர்



ஜூன் 15, திருப்பலி முடிந்தவுடன் பங்குதந்தை ஜோஸ் புரையிடகுந்நேல் அவர்கள் தலைமையில் பங்கு பேரவை நடைபெற்றன. ஜூன் 22, திருப்பலி பின் பங்கு தந்தை தலைமையில் பொது மன்றம் நடைபெற்றன. தொடர்ந்து பங்கு தந்தையின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. ஜூன் 27, திருஇருதய திரு விழாவை முன்னிட்டு திருப்பலி, நற்கருணை, ஆராதனை மற்றும் பாவசங்கீர்த்தனம் நடைபெற்றன.

## கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்



2025 ஜூன் 1 ஆம் நாள் பங்குத்தந்தை அஜின் ஜோஸ் அவர்களால் 2025-26 மறைக்கல்வி ஆண்டு பங்கில் தொடங்கி வைக்கப்பட்டது. தலைமை ஆசிரியை அருள்சகோதரி ஜோதிஸ் அவர்கள் ஆசிரியர் - மாணவப் பிரதிநிதிகளோடு இணைந்து குத்துவிளக்கு ஏற்றினார். திருப்பலிக்கு இடையில் ஆசிரியர்கள் மெழுகு திரி ஏந்தி உறுதி மொழியை ஏற்றுக் கொண்டனர். 2 ஆம் தேதி பள்ளி செல்லும் மாணவ மாணவியரின் பாடப் புத்தகங்களோடு இணைந்து எழுது பொருள்களும் மந்திரிக்கப்பட்டது. 15 ஆம் தேதி பங்கின் புதிய கைகாரர்களாக திரு. மோகன் தாஸ் மற்றும் திரு. இம்மானுவேல் நெல்சன் ஆகியோர் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக கைக்காரர்களாக பணி செய்த திரு. ரத்தினமணி மற்றும் திரு. தர்மராஜ் ஆகியோருக்கு திரு. ஜோசப், பங்கின் சார்பில் நன்றி தெரிவித்தார். பங்குத்தந்தை நினைவுப் பரிசு வழங்கினார். 19 ஆம் தேதி நற்கருணை திருவிழா பங்கில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஜூன் 18 இல் சூசைபுரத்தில் நடைபெற்ற தியானத்திலும் 28 இல் சீனாய் தியான இல்லத்தில் நடைபெற்ற தியானத்திலும் பங்கிலிருந்து திரளான பேர் கலந்து கொண்டனர். 27 - 29 ஆகிய நாட்களில் தக்கலை சங்கமத்தில் நடந்த இளையோர் பயிற்சி முகாமில் பங்கிலிருந்து ஆறு இளையோர் பங்கேற்றனர். குழந்தை இயேசு இயக்க ஆண்டு விழாவில் இப்பங்கை சேர்ந்த சிறார்கள் பரிசுகள் பெற்று பங்கிற்கு பெருமை சேர்த்தனர்.

## புனித சூசையப்பர் மறைவட்ட தேவாலயம் சூசைபுரம்

ஜூன் 01, 2025-2026 ம் கல்வி ஆண்டிற்கான மறைக்கல்வி வகுப்புகளைப் பங்குத்தந்தை பேரருட்தந்தை ஜோண்சிலால் அவர்கள் ஜெபம் செய்து குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்கள். ஆசிரியர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். 8 ஆம் தேதி, பெந்தகோஸ்து திருவிழா கொண்டாடப்பட்டது. திருப்பலிக்கு பின்னர் மறைக்கல்வி மாணவர்கள் முன்னிலையில் பங்குத் தந்தையின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. 13 ஆம் தேதி, மாலை 5.45 மணிக்கு புனித அந்தோணியார் திருவிழா திருப்பலி பங்கின் முன்னாள் பங்குத்தந்தை பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ்

அவர்கள் தலைமையில் சிறப்பிக்கப்பட்டது. திருப்பலிக்குப் பின்னர் தந்தை அவர்களுக்கு பங்கு மக்கள் அனைவரும் இணைந்து வாழ்த்துரை மற்றும் பாடல் பாடி பெயர் கொண்ட திருவிழா வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டனர். பின்னர் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. 11 ஆம் தேதி, நற்கருணை திருநாளை முன்னிட்டு திருப்பலிக்குப் பின்னர் திவ்ய நற்கருணை நவநாள் ஒன்பது நாட்கள் தொடர்ந்து ஜெபிக்கப்பட்டது. 15 ஆம் தேதி, காலை திருப்பலிக்குப் பின்னர் பங்கு பேரவை கூட்டம் பங்குத்தந்தை பேரருட்தந்தை ஜோண்சிலால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 19 ஆம் தேதி, மாலை 5.45 மணிக்கு நடைபெற்ற திருப்பலியில் திவ்ய நற்கருணை திருவிழா மற்றும் இரட்டையர்கள் தினம் கொண்டாடப்பட்டது. 25 ஆம் தேதி, புத்தாலயக் குடிலில் ஆயர் தலைமையில் நடைபெற்ற சிறப்பு ஜெபத்திற்கு பின்னர் மறைமாவட்ட திருத்தல குழு கூட்டம் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து நடைபெற்றது. 27 ஆம் தேதி, மாலை இயேசுவின் திரு இருதய திருவிழாவானது கொண்டாடப்பட்டது . திருப்பலிக்குப் பின்னர் இயேசுவின் திரு இருதய உறவியத்தினரால் நேர்ச்சை அப்பம் அனைவருக்கும் வழங்கப்பட்டது. ஜூன் மாதம் 27,28,29 ஆகிய நாட்களில் தக்கலை சங்கமத்தில் வைத்து மறைமாவட்ட இளையோர் இயக்கத்தினரால் நடத்தப்பட்ட பயிற்சியில் எம் பங்கிலிருந்து 9 இளையோர்கள் கலந்து கொண்டனர்.

## நித்திரவிளை

### ▶ புனித ஜார்ஜியார் திருத்தலம் – முன்சிறை

ஜூன் 01, காலை ஆடம்பர திருப்பலிக்கு பின் 2025- 26 ஆம் கல்வி ஆண்டின் மறைக்கல்வி துவக்க விழா நடைபெற்றது. தலைமை ஆசிரியர் மற்றும் அருட்சகோதரி முன்னிலையில் அனைத்து மாணவர்களும் ஆசிரியர்களும் ஒளியேற்றி உறுதிமொழி எடுத்தனர். 6 ஆம் தேதி, மாதத்தின் முதல் வியாழன் காலை 6 மணி முதல் மாலை ஆறு மணி வரை தொடர் ஜெபமாலையும் நற்கருணை ஆராதனையும் திருப்பலியும் நடைபெற்றது. எல்லா வியாழக்கிழமைகளிலும் ஆடம்பர நற்கருணை ஆராதனையும் நற்கருணை பவனியும் திருப்பலியும் நடைபெற்று வருகிறது.

### ▶ புனித அமல மரியா ஆலயம் – சீனிவளை

ஜூன் 01, காலை திருப்பலிக்கு பின் தூய ஆவிப் பாடலுடன் 2025- 26 ஆம் கல்வியாண்டு மறைக்கல்வி துவக்க விழா நடைபெற்றது. அருட்தந்தை லிஜூ அவர்கள் ஒளியேற்ற ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து ஒளியேற்றி உறுதிமொழி எடுத்து ஜெபித்தனர்.

### ▶ புனித ஜெய மாதா ஆலயம் – நித்திரவிளை

ஜூன் 01, அன்று 2025- 26 ஆம் கல்வியாண்டு மறைக்கல்வி துவக்க விழா காலை திருப்பலிக்கு பின் நடைபெற்றது. அருட்தந்தை மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் இணைந்து ஒளி ஏற்றி உறுதிமொழி எடுத்து ஜெபித்தனர். 7-ஆம் தேதி மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பில் சைதன்யா வகுப்பு நடைபெற்றது. மறை மாவட்ட இயக்குனர் தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் வகுப்பு நடத்தினார்கள். எல்லா பங்குகளில் இருந்தும் தாய்மார்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை பேரருட்தந்தை ஜஸ்டின் செறுவேலில் அவர்களும் மாதர்ஜோதிஸ் உறுப்பினர்களும் இணைந்து செய்தனர். இணை இயக்குநர் அருட்சகோதரி றோஸ் அவர்களும் மறைமாவட்ட தலைவர் திருமதி. ஜூலியட் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## படந்தாலுமூடு

### ▶ புனித மரிய கொரற்றி ஆலயம் அதங்கோடு

ஜூன் 01, 2025- 26 ஆம் கல்வி ஆண்டிற்கான மறைக்கல்வி வகுப்புகள் பங்கு தந்தை அவர்கள் குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தார். ஆசிரியர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். 08 ஆம் தேதி, திருப்பலிக்கு பின் பங்கு தந்தையின் பெயர் கொண்ட திருவிழா கொண்டாடப்பட்டது. பங்கு குடும்ப விழாவை முன்னிட்டு வீடு சந்தித்தல் பங்கு தந்தை அவர்களால் நடத்தப்பட்டன. ஜூன் 22, குழந்தை ஈசோ இயக்க ஆண்டு விழாவில் சிறார்கள் இறைவணக்க பாடல் பாடி, நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, பரிசுகள் பெற்றனர்.

### ▶ மார்ட்டின் டி போரஸ் ஆலயம்,கழுவன்திட்டை

ஜூன் 01, 2025- 26 ஆம் கல்வி ஆண்டிற்கான மறைக்கல்வி வகுப்புகள் பங்கு தந்தை அவர்கள் குத்துவிளக்ககேற்றி துவங்கி வைத்தார்கள். ஆசிரியர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். 6 ஆம் தேதி, முதல் வெள்ளி மாலை 6 மணிக்கு திருப்பலியும், அதை தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. 8 ஆம் தேதி, பங்குப் பேரவை கூட்டம் நடைபெற்றது.

### ▶ புனித பவுல் ஆலயம் தெற்றியோடு

ஜூன் 01, 2025-26 ஆம் கல்வியாண்டிற்கான மறைக்கல்வி வகுப்புகள் பங்கு தந்தை அவர்கள் குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தார்கள். ஆசிரியர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள். 22 ஆம் தேதி, திருவிழாவிற்கு பங்கு

மக்களை தயாரிக்கும் விதமாக மாலை 5 மணிக்கு திருப்பலி அதை தொடர்ந்து நற்கருணை ஆராதனை மற்றும் ஒப்புரவுஅருட்சாதனம் வழங்கப்பட்டது. 53 வது குடும்ப திருவிழா ஜூன் 25 முதல் 29 வரை நடைபெற்றது. முதல் நாள் மாலை 6 மணிக்கு பங்குதந்தை அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்கள் திருக் கொடியேற்றி தொடங்கி வைத்தார். அதைத் தொடர்ந்து நவநாள் மற்றும் ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. இரண்டாம் நாள் ஆடம்பர திருப்பலியை தொடர்ந்து பக்த இயக்கங்களின் ஆண்டு விழா நடைபெற்றது. மூன்றாம் நாள் திருப்பலி தொடர்ந்து நற்கருணை ஆராதனையும், நான்காம் நாள் திருப்பலியை தொடர்ந்து திருப்பவனி நடைபெற்றது. இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை இராசை திருப்பலியும், மாலை 5 மணிக்கு திருக்கொடி இறக்குதல் மற்றும் மறைக்கல்வி ஆண்டு விழாவும் நடைபெற்றது.

### ▶ திரு இருதய மறைவட்ட ஆலயம் படந்தாலுமூடு

பங்கு குடும்ப விழா ஜூன் 20 முதல் 29 வரை 10 நாட்கள் நடைபெற்றது. முதல் நாள் மாலை 6:30 மணிக்கு பங்கு தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் திரு கொடியேற்றி தொடங்கி வைத்தார். திருவிழாவின் ஒவ்வொரு நாளும் மாலை 5:30 மணிக்கு ஜெபமாலையும், 6:00 மணிக்கு திரு இருதய



நவநாள் செபமும், மாலை 6:15 மணிக்கு ஆடம்பர திருப்பலியும் நடைபெற்றது . மூன்றாம் நாள் திருப்பலி காலை 9 மணிக்கு மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அன்றைய தினம் நான்கு குழந்தைகள் முதல் திருவிருந்தைப் பெற்றுக் கொண்டார்கள். ஆறாம் நாள் திருவிழா திருப்பலிக்கு பின் மறைக்கல்வி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவும், ஏழாம் நாள் செபமாலை பவனியும், எட்டாம் நாள் நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றது. ஒன்பதாம் நாள் ஆடம்பர திருப்பலிக்கு பின் தேர் பவனியும், பத்தாம் நாள் காலை 9 மணிக்கு இராசை திருப்பலியும் அதை தொடர்ந்து திருக்கொடி இறக்குதல் மற்றும் அன்பின் விருந்தும் நடைபெற்றது.

# தென்காசி மறைத்தள செய்திகள்

## அருட்பணியாளர்கள் மற்றும் அருட்கன்னியர்கள் கூட்டம்



ஜூன் மாதம் 28 ஆம் தேதி டொரேத்தியர் அருள் கன்னியர்களின் இல்லம் பண்பொழியில் வைத்து மாலை 5.45 மணியளவில் ஆராதனையுடன் கூட்டம் ஆரம்பமானது. புதியதாக பணி நியமனம் பெற்ற மறைத்தாள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சுரேஷ் அவர்களின் தலைமையில் கூடுகை நடத்தப்பட்டது.புதியதாக பணி நியமனம் பெற்று வந்த அனைவரையும் வரவேற்று புதிய பொறுப்புகள் மற்றும் செயல்பாடுகளைப் பற்றி கலந்துரையாடப்பட்டது. இறுதி ஜெபத்தோடும் அன்பு விருந்துடன் கூடுகை நிறைவுற்றது.



**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா**

| MONTHLY AGENDA –JULY 2025 | | |
|---|---|---|
| DATE | DAY | EVENTS |
| 1 | Tue | SINAI: Intercessory Prayer |
| 3 | Thu | Dukhrana of St. Thomas, the Apostle |
| 4 | Fri | VC: Adoration for Vocation (Thuckalay-Pilankalai Forane)<br>SINAI: Retreat at Vattakottai |
| 5 | Sat | TCSL: Inauguration |
| 6 | Sun | CAT: Sunday School Anniversary at Kalluvilai<br>KKSSS: Gatekeeping Programme for Parish Council and Pious Association leaders at Kulasekharam<br>LC: Central Council Meeting at Kalluvilai<br>MJ: Animators Meet, Director's visit to Pallikonam Parish<br>SVP: CC Meeting |
| 8 | Tue | SINAI: Intercessory Prayer |
| 11 | Fri | FA: Marriage Preparation Course |
| 12 | Sat | SINAI: Evening Retreat at Malaicode<br>SMYM: Forane Directors' Meeting<br>FA: Marriage Preparation Course<br>MS: Manjalumoodu Curia Training |
| 13 | Sun | CAT: Basic training Programme for Catechists:Class II at Padanthalumoodu (Batch:VIII)<br>LC: Forane Leaders Meeting<br>FA: Marriage Preparation Course<br>MJ: Bible sentence writing competition<br>SVP: AC Meeting |

| | | |
|---|---|---|
| 14 | Mon | Garment units directors meeting @ Bishop's House<br>EIRD: Kanyakumari United Christian Council Meeting |
| 15 | Tue | Junior Priests ongoing formation @ Sangamam<br>CML: National Executive Committee Meeting<br>SINAI: Intercessory Prayer |
| 16 | Wed | Junior priests meeting & Priest's Conference @ Sangamam<br>KKSSS: ICDS Meeting at Kulasekharam |
| 18 | Fri | Meeting of Forane Vicars @ Bishop's House<br>SINAI: Evening Retreat at Palappallam |
| 19 | Sat | TCSL: Seminar for Students<br>MJ: One hour class |
| 20 | Sun | CAT: Basic training Programme for Catechists: Class III at Padanthalumoodu (Batch:VIII)<br>SMYM: Central Team Meeting<br>URM: Padanthalumoodu-Nithiravilai Foranes Animators' Meeting<br>MJ: Director's visit to Kulasekharam Parish |
| 21 | Mon | EIRD: Tamil Nadu United Christian Council & Inter Religious Meeting |
| 22 | Thu | SINAI: Intercessory Prayer |
| 25 | Fri | Presbyteral council @ Sangamam<br>HC: Cancer Awareness Medical Camp at Palugal |
| 26 | Sat | MIG: St. Alphonsa Navanaal Online |

| | | |
|---|---|---|
| 27 | Sun | CAT: Basic training Programme for Catechists: Class IV at Padanthalumoodu (Batch:VIII) LC: Central Council Meeting at Kalluvilai SMYM: Forane Executive Meeting MJ: Kaisalavilai Unit Visit SVP: CC Meeting URM: Retreat for Soosaipuram-Thuckalay Pilankalai Forane Leaders at Kalluviali |
| 28 | Mon | SINAI: Intercessory Prayer |
| 29 | Thu | Department Directors meeting @ Bishop's House |
| 30 | Wed | Department Directors meeting @ Bishop's House<br>KKSSS: World Environment Day Celebration at Marappady |

FR.THOMAS POWATHUPARAMPIL, PROTOSYNCELLUS

| BIRTHDAY OF REV. FATHERS - JULY - 2025 | |
|---|---|
| FR. JITHIN THOMAS MCBS | 06 |
| FR. JABANESH | 07 |
| FR. LIJU MARATTUKALAM | 09 |
| FR. SANJO THENEPLACKAL | 18 |
| FR. MICHAEL AROKIASWAMY SDB | 26 |

## BISHOP'S ENGAGEMENTS - JULY 2025

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Tue | 01.30 pm<br>05.30 pm | Nagercoil : UCC Meeting<br>Muzhucode : Feast Day Holy Qurbana |
| 2 | Wed | 10.00 am | Mission visit >>Villiupuram |
| 3 | Thu | 07.00 am<br>04.00 pm | Vilipuram: CHAT Annual GB Meeting Chennai: St Thomas Mount Basilica Blessing >> Vilipuram |
| 4 | Fri | 09.00 am | Villipuram: CHAT Annual GB meeting |
| 5 | Sat | 03.00 pm | Chengalpett : Health Commission Meeting >> Poondi |
| 6 | Sun | | Poondi: TNBC-TPC annual meeting |
| 7 | Mon | 07.00 am | Poondi: TNBC Bishop's meeting >> Thuckalay |
| 8 | Tue | 10.00 am | Bishop's House |
| 9 | Wed | 10.00 am<br>03.00 pm | Bishop's House : JMJ Trust meeting<br>Padanthalumoodu: Cathedral sub-committee meeting |
| 10 | Thu | 09.30 am<br>05.30 pm | Bishop's House: Curia meeting<br>Mukkottukal : Minor Seminary Academic Year Inauguration |
| 11 - 13 | Fri - Sun | | Jalandhar : Episcopal Ordination |
| 14 | Mon | 03.00 pm | Bishop's House: Garment units directors meeting |

| | | | |
|---|---|---|---|
| 15 | Tue | 09.30 am | Sangamam : Junior Priests ongoing formation |
| 16 | Wed | 10.00 am<br>02.00 pm | Sangamam : Cathedral Core committee meeting<br>Sangamam : Junior priests meeting & Priest's Conference |
| 17 | Thu | 09.30 am | Bishop's House |
| 18 | Fri | 10.00 am<br>06.30 pm | Bishop's House: Meeting of Forane Vicars<br>Mankarai : Feast Day Raza Qurbana |
| 19 | Sat | 02.00 pm<br>04.00 pm | Soosaipuram : Gandhian Awards<br>Kalluvilai : AIDACT Meeting |
| 20 | Sun | 07.30 am<br>11.00 am<br>02.00 pm<br>03.30 pm | Nagercoil : Baptism Holy Qurana<br>Manjalummoodu : Vincent De Paul anniversary<br>Padanthalumoodu: CML General Body Meeting<br>Padanthalumoodu: Diocese Engineers Meet |
| 21 | Mon | 10.00 am | Benefactors Visit |
| 22 | Tue | 10.00 am | Bishop's House: Prayer day |
| 23 | Wed | 05.00 pm | Soosaipuram: Visit of Mar Jose Thekkumcherikunnel |
| 24 | Thu | 06.00 pm | Bishop's House: Reception to SDS General |
| 25 | Fri | 10.00 am | Sangamam : Presbyteral council >> Palai |
| 26 | Sat | 08.30 am | Palai : Eparchial Jubilee Conclusion |
| 27 | Sun | 10.00 am | Kottayam: Marriage Jubilee Qurbana >> Thuckalay |

| | | | |
|---|---|---|---|
| 28 | Mon | 10.00 am | Nagercoil : Alphonsa School feast |
| 29 | Tue | 02.00 pm | Bishop’s House : Department Directors meeting |
| 30 | Wed | 02.00 pm | Bishop’s House : Department Directors meeting |
| 31 | Thu | 10.00 am | Bishop’s House : Curia meeting |

**FR. LIJU MATHEW, BISHOP'S SECRETARY**

| FEASTDAYS OF REV. FATHERS - JULY 2025 | |
|---|---|
| FR. THOMAS POWATHUPARAMPIL | 03 |
| FR. THOMAS SATHIANESAN | 03 |
| FR. ABY POOVATHUMMOOTTIL | 03 |
| FR. AJEESH ATTIYIL | 03 |
| FR. JIJI KOIPPURAM | 03 |
| FR. JOHNSON THOMAS MCBS | 03 |
| FR. ROBINS KUZHIKODIL | 03 |
| FR. TINU KOTTACKAPARAMPIL CMI | 03 |
| FR. THOMAS JABANESH | 03 |
| FR. THOMAS KANJIRAKKATTU | 03 |
| FR. THOMAS SAURIAMKUZHY | 03 |
| FR. JOICE CHELACHUVATTIL MCBS | 15 |
| FR. JOMY KAMUKUMMATTATHIL | 15 |
| FR. KURIAN MATHEW KOIPURAM | 15 |
| FR. RAJESH VAYALUMKAL MCBS | 15 |
| FR. SANJO THENEPLACKAL | 15 |
| FR. JACOB AIYAMMATHRA | 25 |
| FR. SHAN AYALLOOR | 25 |
| FR. TOJI PARAMBILPARAMBIL | 25 |
| FR. VINOD KANAKALIL | 25 |




Christ Jubilee of the Children (KII) at Kalluvilai




Golden Jubilee Celebration of  Pallikkonam Chruch




Diocesan Level Youth Camp at Sangamam




Blessing of the Palliative Care Section of Snehavilla at Moolamattom by Major Archbishop Mar Raphel Thattil




Inter Diocesan Meeting at Kanyakumari

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay Published by: Media Department of the Diocese of Thuckalay, Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175 Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570